வட சென்னை

காளிகாம்பாள்

தேவிதரிசனம் -(VII)



வாழ்வில் நம்பிக்கையூட்டும் அம்பாள் வெளியீடுகள்

பொன். பாஸ்கரமார்த்தாண்டன்

தேவி தரிசனம்

(வடசென்னை காளிகாம்பாள்)

பொன். பாஸ்கர மார்த்தாண்டன்

அம்பாள் பதிப்பகம்
48, இராம நாயக்கன் தெரு
நுங்கம்பாக்கம்
சென்னை—600 034.

முதற் பதிப்பு : மார்ச், 1982.

தாமரை மணாளன் தயாரிப்பு

அட்டையை அலங்கரிக்கும்
ஸ்ரீ காளிகாம்பாளின் மூலஸ்தான
வண்ணத் திருவுருவத்தை
வரைந்து உதவியவர்
ஓவியர் மணிவேல்
பின்புற அட்டையில் ஆலய சிவாச்சாரியர்
சாம்பமூர்த்தி குருக்களும்
அறங்காவலர் குழுவினரும்.

விலை ரூ : 4-00

அச்சிட்டோர் : அன்னை அஞ்சுகம் அச்சகம்
இராயப்பேட்டை சென்னை-14.

3-3

இன்னலுறும் மனுக்குலத்தை
பின்னமறக் காத்திடவே
சென்னைநகர் கொலுஅமர்ந்த
கோமகளே, காளியம்மா!

1

சீராளும் சென்னைநகர் திருவெல்லை ஆள்பவளே!
வீரமன்னன் சிவாஜி வெற்றி கண்டான் நினைப்பணிந்து!
சார்ந்து நின்ற வெள்ளையரும் சரணடைந்தார்
நின்பாதம்!
பார் போற்றும் நின்கீர்த்தி பகருதற்கு எளிதாமோ!
நெஞ்சுருகி நினைந்திட்டால் பஞ்சமர்கள் பங்காவாய்!
அஞ்சேலென அருள்சுரந்து ஆதரிக்கும் அமுதாவாய்!
நஞ்சூட்டும் வஞ்சகர்தம் நாணறுக்கும் நாயகமே,
தஞ்சமென பணிந்திட்டோம், தற்காப்பாய்
காளியம்மா!

—காளிகாம்பாள் பாமாலை

உலகமெங்கும் காற்று நீக்கமற நிறைந்திருந்தாலும்—நோயுற்ற சிலரால் எங்கும் நிறைந்திருக்கும் பிராண வாயுவை சுவாசிக்க முடியாமல் போகும்போது, தனியாக அதைச் சேகரித்துக் குழாய் மூலம் செலுத்துகிறோம்.

இது மருத்துவம்.

எம் தாய் சர்வசக்தியின் மகத்துவமும் அதுபோல்தான்.

அண்டசராசரங்களிலும்— பஞ்சபூதங்களிலும் நீக்கமற நிறைந்திருக்கும் வல்லமை மிக்க சக்தி அவள்...அதனாலேயே மகாசக்தி எனப் பெயர் பெற்றாள். அவளில்லாமல் நம்மை இயக்க வேறுசக்தி இல்லை.

இப்படிப் பரிபூரணியாய்ப் பிரபஞ்சம் முழுதும் நிறைந்திருக்கும் அவளை இயல்பாக உணரும் சக்தியுள்ளவர்கள் மனத்தில் நோயற்றவர்கள்.

அப்படி உணரச் சக்தியற்றிருக்கும் மனப் பலவீனர்களுக்காகப் பிராணவாயு செலுத்தும் குழாய்களைப் போல், அம்மாவின் அருளை உச்சித ஈர்ப்புடன் மக்கள் பெற்று உய்வதற்காக அமைந்தவைதான் ஆலயங்கள்.

அந்தத் திருத்தலங்கள் பல்வேறு மகிமைகளால் வெவ்வேறு விதமான பெருமைகள் பெற்றிருக்கும்.

சில தலங்கள் இதிகாச—வேதகால திருவிளையாடல் மகிமைகள் பெற்றிருக்கும்...

சில தலங்கள் சரித்திரச் சிறப்புப் பெற்றிருக்கும்...சில தலங்கள் மூலத்தான மூர்த்தியின் பிரதிஷ்டை இயந்திர அமைப்புக்களால் மகிமை பெற்றிருக்கும்...

சில தலங்கள் பூஜை நியம சிறப்புக்களால் அருள் மகிமை பெற்றிருக்கும்...சில தலங்கள், 'குழந்தையும் தெய்வமும் கொண்டாடுமிடத்தே' என்ற முதுமொழிக்கேற்ப-அன்புடம் வழிபடும் மக்கள் மத்தியில் அன்னை பராசக்தி நிகழ்த்தும் அதிசயங்களால் பெருமை பெற்றிருக்கும்...

வடசென்னை தம்பு செட்டித் தெருவில் தம் அருள் சாம்ராஜ்யத்தை நிலை நாட்டி, பக்தி செய்யும் மாந்தருக்கெல்லாம் கருணை செய்து கொண்டிருக்கும் எம் தாய் காளிகாம்பாள் என்னும் காமாட்சியின் திருத்தலமோ, மேற்சொன்ன அத்தனை பெருமைகளுமே சேர்ந்து தனிச்சிறப்பு பெற்று திகழ்கிறது...

அதோ...வேதகாலம்...

இவ்வுலகில் உயர்ந்த அருட்திரு மலையானகைலாயத்தில் அம்மையப்பர் மத்தியில் ஞானப்பிணக்கு நாடகம் ஒன்று நிகழ்கிறது...

3-3

அம்மா உமாமகேஸ்வரி இந்த பூமிக்கு நேரிடையாக எழுந்தருளி மக்களைக் காக்க திருவுளம் கொண்டு நிகழ்த்திய நாடகம்...

சர்வேசுவரனின் கண்களைப் பொத்தி விளையாடுகிருள் உமாமகேஸ்வரி. உலகுக்கு அருள் ஒளி ஊட்டிவரும் தேவ தேவனின் கண்களைத் தேவதேவி பொத்தி மறைத்ததும், சர்வலோகங்களும்—அண்ட சராசரங்களும் இருண்டு போகின்றன. ஜீவகோடிகள் செயலற்றுப் போகின்றன. பஞ்சபூதங்கள் இயக்கமற்றுத் தேங்கிப் போகின்றன. எங்கும் இருள்...உற்பாதம் அந்தக் கணத்துள்...

அரன் நினைத்தும் அந்த உற்பாதத்தைத் தீர்க்க முடிய வில்லை. அவர் கண்களைப் பொத்தியிருப்பது அவருக்குள்ளும் மகாசக்தியாக இருக்கும் எம் லோகமாதா அல்லவா?

பின் அன்னை கருணைகூர்ந்து கையை அகற்றியதும், பிரபஞ்சம் மீண்டும் உயிர் இயக்கம் பெற்றது...

தம் செயலால் அவ்வாறு ஒருகணம் இயக்கம் இழந்து தவிப்புக்குள்ளான மக்களுக்குப் பரிகாரமாக—காலங்கால மாக அவர்களருகே இருந்து காத்து நிற்க, அம்மையே பூலோகத்துக்கு எழுந்தருளுகிருள்...

அப்படி அவள் புறப்படுவதற்கு ஓர் ஆதாரமாக தேவ தேவியர்களுக்குள் ஒரு வாக்குவாதம்...முடிவில், 'தான் பூலோகத்துக்கு வந்து தவம்செய்து, மீண்டும் அம்மையப்பர் களாக இணைவது' என்று அன்னை திருவுளம் கொள்கிருள்.

பூலோகம் செய்த தவப்பயனுய் அம்மா காமாட்சியாய் பூவுலகுக்கு வந்து-திருவண்ணுமலையில் நின்றருளி பல அற்புதங்கள் புரிகிருள். பின் மாங்காடு தலத்தில் தீச்சுடர் முனையில் விரலூன்றி தவமியற்றி, பின் பாலாற்றங்கரையில் காஞ்சியில் காமாட்சியாய் அமர்ந்து தவ நிறைவு பெறுகிருள்...

அவ்வாறு காஞ்சிமாநகரில் காமாட்சியெனும் திருநாமத்துடன் அமர்ந்த அம்மா, தன் இச்சாசக்தியால், பன்னிரண்டு தலங்களில் காட்சி தந்து திருவருள் சுரக்கிறாள் என்பது ஐதீகம்.

அந்த பன்னிரண்டு திருத்தலங்களுக்குள் ஒன்றுதான்—

இதிகாசங்களான மச்சபுராணம், வாமனபுராணம், கூர்மபுராணம், லிங்கபுராணம். பவிஷ்ய புராணம் ஆகிய புராணங்களில் 'பரதபுரி' என்றும்—'சொர்ணபுரி' என்றும் அழைக்கப்பட்ட தலம்.

அதுவே இன்று அம்மா அமர்ந்திருக்கும் கடல் சார்ந்த பகுதியாகும். (கோட்டை-தம்புச்செட்டித் தெரு பகுதி.)

ஆதியில் பரதவர்கள் நிறைந்திருந்த கடலோரப் பகுதியாக அப்பகுதி இருந்ததால், 'பரதபுரி' என்று அழைக்கப் பெற்றதாம்.

அன்னையை இத்தலத்தில் ஐஸ்வரிய நாயகனான குபேரன் வணங்கித்தான் அளவற்ற செல்வத்தை (வெங்கடேசப் பெருமாளுக்கே கடன் கொடுக்கும் அளவு.) பெற்றானாம். அதனால் இது 'சொர்ணபுரி' எனவும் பெயர் பெற்றதாம். (இன்றும் இத்தலத்தில் அம்பாளை வழிபட்டால் தனபிராப்தி செழிக்கப் பெறுவர் என்பது ஐதீகம்.)

'சொர்ணபுரி' என்றும்—'பரதபுரி' என்றும் வழங்கிடும் இந்த நெய்தல் நிலப் பகுதியில்தான்—ராகவத காலத்தில் சந்தனு மகராஜன், பரதவகுல மகளாகிய மச்சகந்தியை பரிமளகந்தியாக மாற்றி திருமணம் செய்த வரலாறு நிகழ்ந்ததாம்...

இந்தத் தலத்தின் மகிமையைப்பற்றி நாரதருக்கே ஓர் சிறந்த விளக்கம் கிடைத்தது வேதகாலத்தில்...

நைமிசாரண்யம் என்ற வனத்தில் இருபத்தாறுயிரம் ரிஷிகளுக்கு திரிகால ஞான விளக்கம் கூறிக் கொண்டிருந்த சூதபுராணிகரிடம் ஒருமுறை நாரதர்.

''அருட்பெரும் தலங்களான திருவண்ணாமலையிலும் காஞ்சியிலும் அருளற் புதங்கள் புரிந்த மகாசக்தியை—இவ்விரு தலங்களையும் ஒரே நேரத்தில் தரிசிக்கும்க் பாகியத் துடன் எந்த ஸ்தலத்தில் வழிபடலாம்?'' என்று கேட்டாராம்...

அப்போது சூதபுராணிகர் சுட்டிக் காட்டிய திருத்தலம் இன்று காளிகாம்பாள் உறைந்திருக்கும் முற்கால 'பரதபுரி!' தான்.

அவர் கூறினார்...

''பஞ்சபூத ஸ்தலங்களில் ஒன்றான திருவண்ணாமலையின் மகிமையும், காமாட்சி உறை காஞ்சியின் மகிமையும் இணைந்த பெருமைக்குரியது பரதபுரிதான். அதுதான்—நாகலோகத்துக் கன்னியரும், தேவலோகத்துக் கன்னியரும் அம்பாளை வழிபட்டு அருள் பெற்ற தலம். அது இந்திரன், குபேரன், விராட்புருஷனான ஸ்ரீவிஸ்வகர்மா ஆகியோர் அம்பாளை வழிபட்ட இடம். கடலைத் தீர்த்தமாகப் பெற்ற பெருமைமிகு தலம்...அது மட்டுமல்ல; வழிபடுவோர் இஷ்ட காம்யார்த்த சித்திகளை வெகுசீக்கிரத்தில் பெறும் தலம் இதுவே!'' என்றார்.

இந்த விளக்கம் இன்றும் பொருந்தியிருக்கக் காண்கிறோம் இத்தலத்தில்.

இத்தலத்தின் தீர்த்தம் கடல்தான். வேறு சக்தி தலங் களில் காணமுடியாத காட்சி இது. (ஸ்தல விருட்சம்—மாமரம்.)

விராட் புருஷனான பகவான் விஸ்வகர்மா விசேஷ ஈடு பாட்டுடன் அம்மனை வழிபட்டதன் தொடர்ச்சியாகவே இந்த ஆலயம் விஸ்வகர்மா இனத்தினரின் நிர்வாகத்திலேயே இருக்கிறது.

தேவகன்னியர் அம்பாளை வழிபட்டு அருள்பெற்றதை நினைவூட்டும் விதத்தில் இன்றும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமை

யிலும் கன்னிப்பூஜையும், கோபூஜையும் நடக்கிறது இந்தலத்தில். இவை நடக்கும் ஒரே தலம், சென்னையில் இது ஒன்றுதான். 'சுவாசினி சங்கம்' (சுமங்கலிகள் சங்கம்) என்ற மாதர் அமைப்பு அதை வாராவாரம் நடத்துவது கண் கொள்ளாத்தெய்வீகக் காட்சி.

''கன்னியருக்கும் சுமங்கலிகளுக்கும் விசேஷ அருட் கிட்டும் தலம் இது. இங்கு வழிபட்டு அம்மனைப் பிரார்த் திக்கும் கன்னியருக்கு உடனடியாக திருமண பாக்கியம் கிட்டுகிறது. மகப்பேறு இல்லாதோருக்கு அந்தப் பாக்கியம் கிட்டுகிறது'' என்கிறார், ஆலயத்தின் சிவாச்சாரியாரான சாம்பமூர்த்தி குருக்கள்.

இந்தத் தலத்தில் அம்மா அமர்ந்து அருள்பாலிக்கும் நிலையே ஓர் அபூர்வமானது. மேற்கு நோக்கி அமர்ந்திருக் கிறாள் அம்பாள். தேவி அவ்வாறு மேற்கு நோக்கி அமர்ந் திருப்பது ஓர் அபூர்வ அமைப்பு. இந்த நிலையில் இருக்கும் போது அவள் உடனடியாக வேண்டும் வரத்தை அனுக் கிரகிப்பாள். அது பலர் வாழ்விலும் நிரூபணமாகியிருக் கிறது'' என்கிறார் சிவாச்சாரியார்.

அவர் கூற்றை மெய்ப்பிப்பதுபோல், அம்பாள் அனுக் கிரகம் பெற்றதால் வளம் பெற்ற செய்திகள் எத்தனை... எத்தனையோ...!

'பிராட்வே ஆர்ட்ஸ்' கல்லூரியில் ஆங்கிலப்பேராசிரியராக இருப்பவர் திருமதி பிரேமா பாண்டுரங்கன். 'சமஸ்கிருதி' என்ற அமைப்பின் செயலாளரும் கூட அவர். மயிலாப் பூரிலிருக்கும் அவர் வடசென்னையிலிருக்கும் தன் கல்லூரிக்கு வரும்போதெல்லாம், தவறாமல் தினம் அன்னையையும் தரிசித்துச் செல்வாராம். அப்படி அம்மா அவரை ஈர்த்த தற்குக் காரணம், அவர் வாழ்வில் அன்னை காளிகாம்பாள் நிகழ்த்திய ஓர் அற்புதம்தான்...

வெகுகாலம்வரை தன் கல்லூரியிருக்கும் பிராட்வே பகுதிக்கு வந்து கொண்டிருந்தாலும், தம்புச் செட்டித் தெரு

விலிருக்கும் இந்த அம்பாளை அவர் தரிசிக்க வாய்ப்புக் கிட்டவில்லை. ஆனால், அவருடைய தோழி ஒருவர் மாத்திரம் அடிக்கடி இந்த அம்பாளைப் பற்றிக் குறிப்பிடுவாராம்...

ஒருமுறை அவருடைய சித்திக்கு உடல்நிலை மிகவும் மோசமாகியிருந்தது. இரத்தக் கொதிப்பு-டயபட்டீஸ் ஆகியவற்றால் ஏற்பட்ட தீவிர நிலை. கிட்டத்தட்ட 'கோமா'வில்தான் பிரக்ஞையற்ற நிலையில், மயிலாப்பூரிலுள்ள ஒரு பிரபல நர்ஸிங்ஹோமில் சேர்க்கப்பட்டு படுக்கையில் இருந்தார்.

அப்பொழுதும் திருமதி பிரேமாவைத் தற்செயலாக அவர் தோழி இந்த ஆலயத்துக்கு அழைத்தார்...சித்தி வீட்டில் படுத்திருந்ததால் திருமதி பிரேமாவுக்கு ஆலயத்துக்குச் செல்ல அதிக ஈடுபாடு இல்லை. இருப்பினும் ஏதோ ஓர் உந்துதலில் ஆலயத்துக்கு வந்து வணங்கி, தன்சித்தியைப் பற்றிய மனக்குறையை அம்பாளிடம் தெரிவித்துவிட்டு சென்றார்...

என்ன ஆச்சரியம்...! சித்தியின் உடல் நிலையில் கணிசமாக முன்னேற்றம் ஏற்பட்டு, அவர் எழுந்து உட்கார்ந்திருந்தார்.

'இப்படியும் நடக்குமா?' என்ற வியப்புடன் திருமதி பிரேமா சித்தியிடம் விசாரித்தபோது, சித்தி கூறிய செய்தி அவரை அப்படியே வியப்பிலாழ்த்தியது...

சித்தியின் கனவில், சிகப்புப் பட்டுப் பாவாடை கட்டிய ஒரு சிறுமி வந்து, ''ஏன் இங்கே படுத்திருக்கிறாய்? எழுந்திரு...வீட்டுக்குப் போகலாம்!'' என்று கூறுவது போல் தோன்றியதாம்...அதற்குப் பின்னரே அந்த அம்மையாருக்கு உடல் தேறிவிட்டதாம்.

திருமதி பிரேமாவுக்கு அப்போதுதான் ஒரு விஷயம் பளிச்சென்று நினைவுக்கு வந்தது. அவர் ஆலயத்தில் வணங்கிக் கொண்டிருந்தபோதுதான், சித்தியின் கனவில்

சிறுமியாய் அம்பாள் தோன்றியிருக்கிறாள்...! அப்போது ஆலயத்தில் அம்பாளுக்குச் சாத்தப்பட்டிருந்த ஆடையும் சிகப்புதான்...அதே சிகப்பு நிறப் பாவாடையுடன்தான் சித்தியின் கனவிலும் தோன்றியிருக்கிறாள்...!

கீழ்ப்பாக்கத்திலுள்ள செகரட்டேரியட் காலனி, 14-ம் எண் உள்ள இல்லத்திலுள்ள திருமதி பத்மா நடராஜன், அன்னை காளிகாம்பாள் பேரில் ஈடுபாடு கொண்டவர். ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் அங்கு சுமங்கலிப் பெண்கள் கூடி (சுவாசினி சங்கம்) நடத்தும் மகாபூஜை, கன்னிப் பூஜை முதலியவற்றில் கலந்து கொள்வார்...

—இப்படி ஒருமுறை அவர் அம்பாளின் ஆலயத்தில் பூஜையில் இருந்தபோது, ஒரு பயங்கர ஆபத்து அவர் குடும்பத்துக்கு நேரவிருந்தது.

அப்போது—

பம்பாயில் ஒரு நிறுவனத்தில் மார்க்கெட்டிங் ஆபீசராக இருந்த அவருடைய கணவர் திரு. எல். ஆர். நடராஜன் சிலருடன் ஒரு மலைப்பாதையில் காரில் பயணம் செய்து கொண்டிருந்தபோது, திடீரென ஒரு விபத்து ஏற்பட்டு, அந்த வண்டி அறுபது அடி உயரத்திலிருந்து விழுந்து விட்டது...

திரு. நடராஜனுடன் பயணம் செய்த அத்தனை பேரும் உயிரபாயமும்-பலத்த காயமும் அடைந்தனர். ஆனால், நடராஜன் மாத்திரம் எவ்விதக் காயமும் இன்றி தப்பிவிட்டார்.

அந்த விபத்து நடந்த அதே வேளையில் திருமதி பத்மா கோயிலில் அம்பாளை வழிபட்டுக் கொண்டிருந்தாராம்!

சென்னையை அடுத்த மடிப்பாக்கம் என்ற புறநகர்ப் பகுதியில் வசித்து வருபவர் திரு. கிருஷ்ணமூர்த்தி. அவர் டெலிபோன் இலாகாவில் பணிபுரிகிறார்...அவர் மடிப்பாக்கத்தில், சபரி மலையைப் போலவே ஸ்ரீ ஐயப்பனுக்கு ஓர்

ஆலயம் உருவாக்கிய திருப்பணியில் பெரும்பங்கு ஏற்றுத் தீவிரமாகச் செயல் பட்டவர். தொடர்ந்து தெய்வப் பணிகளில் ஈடுபட்டிருப்பவர்...இவர் மடிப்பாக்கத்துக்குச் சென்று இத்தகு பணிகளில் ஈடுபடத் தூண்டுதலாக இருந்ததே அன்னை காளிகாம்பாள் இவருக்கு அருளிய ஓர் வாழ்வியல் முன்னேற்றம்தானும்...

அவர் கூறினுர்: ''நான் மடிப்பாக்கத்துக்குச் செல்லும் முன், திருவல்லிக்கேணியில் ஒரு சாதாரண ஒண்டுக் குடித்தன வீட்டில் சிரமப்பட்டுக் கொண்டிருந்தேன். பொருளாதாரத் துன்பங்கள் என்னைத் தினம் தினம் நசுக்கிச் சிரமப் படுத்திக் கொண்டிருந்தன. அப்போதுதான் என் நண்பர் ஒருவர் அன்னை காளிகாம்பாளின் மகிமையைப்பற்றிக் கூறி, என்னை ஆலயத்துக்கு அழைத்து வந்தார்... அம்பாளிடம் வந்து நான் கண்ணீர் விட்டு அழுது, என் வாழ்வியல் துன்பங்களையெல்லாம் கூறினேன்...நான் அன்னையை வழி பட்டுச் சென்ற வாரமே ஓர் அதிசயம் நிகழ்ந்தது! சரியாக ஏழு நாட்களுக்குள் எனக்குப் பஞ்சாப் லாட்டரியில் 50,000 ரூபாய் பரிசு விழுந்தது. அந்தக் கணத்திலிருந்து என் வாழ்வில் ஒரு மகத்தான திருப்பம் ஏற்பட்டது. மடிப்பாக்கத்துக்கு ஒரு வீடு கட்டிக் கொண்டு சென்றேன். அங்கு திருப்பணியில் ஈடுபட்டு செயல்பட முடிந்தது. முடிந்தவரை தினந்தோறும் அம்பாள் ஆலயத்துக்குச் சென்று அவளைத் தரிசிக்கிறேன். அம்பாள் இத்தலத்தில் அப்படியோர் அபூர்வ அருட் பிரசாதியாக இருக்கிருள்...மக்களின் நிலையறிந்து, அவர்களுடைய வேதனையைப் போக்குகிருள்!'' என்று உணர்ச்சிப் பெருக்குடன் கூறிய அவர், தன் வாழ்வில் அம்பாள் நிகழ்த்திய இன்னொரு அதிசயத்தையும் குறிப்பிட்டார்.

அவருடைய மகளுக்கு ஓரிடத்தில் திருமணம் நடத்த ஏற்பாடெல்லாம் ஆகியிருந்ததாம்...அப்போது அம்பாளிடம் வந்து அவர் திருமணத்தைக் குறைவில்லாது நடத்தித் தர வேண்டிக் கொண்டு சென்ருராம்...

ஆனால் ஏற்பாடு செய்து கொண்டிருந்த திருமணம் திடீரென்று நின்று விட்டதாம்...

எல்லாருக்கும் கவலையாகி விட்டது, 'அம்பாள் இப்படிச் சோதித்து விட்டாளே!' என்று.

ஓர் உண்மை தெரிந்த பின்னர்தான், 'அம்பாள் எப்படியொரு கருணையுடன் அருள் புரிந்து, அந்தப் பெண்ணின் வாழ்வைக் காத்திருக்கிறாள்' என்று அவர் குடும்பத்தாருக்கு புலனாகியதாம். ஆமாம்; அவர்கள் ஏற்பாடு செய்திருந்த வரன் மிகவும் மோசனமான நடத்தை உள்ளவனாம்... 'அவனோடு திருமணம் நடந்து, என் பெண்ணின் வாழ்வு சீரழிந்து விடாமல் காளிகாம்பாள்தான் காத்திருக்கிறாள்' என்று கண்கள் பொங்கப் பரவசத்துடன் கூறினார் கிருஷ்ண மூர்த்தி.

''பெண்களின் வாழ்வுக்குக் காவலாக நிற்பவள் இத் தலத்தில் மகிமையோடுகொலுவிருக்கும் தாயான காளிகாம் பாள்'' என்று கூறுகிறார், ஆலய சிவாச்சாரியாரான சாம்ப மூர்த்தி குருக்கள்.

அப்படித் தன் பெண் மக்கள்பேரில் அம்பாள் காட்டும் அளவற்றகருணை காரணமாகத்தானோ என்னவோ, சென்னை யில் வேறு எந்த ஆலயத்திலும் காணாத திருக்காட்சியாக, பெண்கள் இணைந்து 'சுவாசினி சங்கம்' அமைத்து, மிகுந்த ஈடுபாட்டுடன் வெள்ளிக்கிழமை தோறும் கோபூஜையும்— கன்யா பூஜையும் இத்தலத்தில் நடத்துகிறார்கள். கோமாதா வான பசுவுக்கு பூஜை நிகழ்த்தி வழிபடுவதும்-கன்னிப்பெண் ஒருவரை அம்பாளாகப் போற்றி பூஜை செய்து வழிபடு வதும் பரவசமூட்டும் அருட்காட்சிகள்... கண்டு அனுபவித்த வர்களே அதன் மெய்ஞ்ஞான மேன்மையை விண்டு சொல்ல முடியும்...

சுவாசினி சங்கத் தலைவி திருமதி சுப்புலட்சுமி, முப்பது ஆண்டுகளுக்கு மேலாக அம்பாளிடம் ஈடுபட்டு, தொடர்ந்து வழிபட்டு வருபவராம். ஆதியில் மிகவும் வறுமையில் அவர்

சிரமப்பட்டுக் கொண்டிருந்தபோது, ''நான் இருக்கும் போது, ஏன் கவலைப்படுகிறாய்?'' என்று அவர் கனவில் வந்து அம்பாள் கூறினாளாம்... கனவில் தோன்றிய அதே உருவில் அவள் ஆலயத்திலும் காட்சியளித்தாளாம்!

பல சமயங்களில் தன் அசைவுகளால், பிரத்தியட்சமாய் அம்பாள் இத்தலத்தில் காட்சி அளித்திருக்கிறாளாம்...

இன்றும் அம்பாளின் தெய்விக அசைவுகளைப் பலர் பல்வேறு உருவங்களில் கண்டிருக்கிறார்கள். முன்னாள் அறங் காவலர் துரைசாமி ஆச்சாரியார் இரவு பன்னிரண்டு மணிக்குமேல் பிரகாரம் சுற்றி வருவதை பிரத்தியட்ச மாகக் கண்டிருக்கிறாராம்...

ஆலயத்தில் இரவு நேரங்களில் படுத்திருக்கும் ஆலயப் பணியாளர்கள் இன்றும் பலமுறை அம்பாளின் அசைவைக் கண்டிருக்கிறார்களாம். பிரகாரத்தில் வழியை மறைத்து யாராவது படுத்திருந்தால், யாரோ அவர்களைப் புரட்டி ஒதுக்கமாகப் படுக்கச் செய்துவிட்டுச் செல்வதை உணர்வார் களாம். அதுபோல் சில சமயங்களில் சலங்கைச் சத்தம் ஒலிப்பதைக் கேட்டிருக்கிறார்களாம்...

சமீபத்தில் ஒரு முறை மடப்பள்ளியிலிருக்கும் பரம சிவன் தவறாக ஸ்நானம் செய்யாமல் கருவறைக்குள் சென்று விட்டாராம். அப்போது அரூபமாக யாரோ அடிப்பது போல் இருந்ததாம்... வெளியே வேறு அலுவலாகச் சென்று விட்டு அவசரமாக ஆலயத்துக்குள் நுழைந்து 'ஸ்ரீசக்கரத்' தைத் தொட்டபோது 'ஷாக்' அடித்ததுபோல் இருந்ததாக சிவாச்சாரியார் மகன் சாம்பசிவம் கூறினார்.

அதுபோல்—சுவாசினி சங்கத்தினர் மார்கழி மாதம் கூட்டு வழிபாடு நடத்தும்போது ஓர் அதிசயம் நிகழுமாம்... சுமங்கலிப் பெண்கள் மார்கழி மாதம் முழுவதும் தினம் காலை ஐந்து மணி முதலே கூடி ஸ்லோகங்கள் கூறி வழிபாடு நடத்துவார்களாம். அப்போது 'மஹிசாசுர மர்த்தினி' ஸ்லோகத்தில் பதினைந்தாம் சுலோகத்தைச் சொல்லும்

போது, உள்ளே கருவறையில் நர்த்தனம் ஆடுவதைக் கண் கூடாகச் சிலசமயம் கண்டதுண்டாம்...

இவ்வாறு பக்திப் பெருக்குடன் அவரை வந்தனை செய்வோர் சிலருக்கு, தன் அருள் அசைவுகளால் காட்சி தரும் அம்பாள், தன்னை வழிபடும் பக்தர்கள் அனைவருக்கும் அவர்களோடு கலந்து நின்று, அவர்கள் வாழ்வியல் பிணிகளையும் குறைகளையும் போக்கிக் கருணை நல்குகுருள் என்பது, அங்கு கூடும் எண்ணற்ற பக்தர்களின் அனுபவ பூர்வமான வாக்கு.

அறங்காவலர் குழுவின் தலைவரான திரு. டி. எஸ். ராஜப்பா ஒரு முறை தான் இதய நோயால் பாதிக்கப்பட்டு, ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு, மிகவும் அபாய கட்டத்தில் இருந்தபோது, 'ஓம் காளி', 'ஓம் காளி' என்று அம்பாளின் நாமாவளியையே கூறி, மன அமைதியையும்—பூரண நலனையும் பெற்ற செய்தியை மெய்கனியக் கூறுகிருர்...

5

இஞ்சினியர் மருத்துவப் பணி புரிவாரா?

அல்லது மருத்துவர்தான் பொறியியல் பணி மேற்கொள்ளுவாரா?

பொதுவாக இது நடக்காது...

ஆனல், அன்னை காளிகாம்பாள் இதை நடத்தி வைத்திருக்கிருள்.

அன்னை நிகழ்த்திய இந்த அருள் விளையாடலைப் பற்றி அம்பாளின் சந்நிதியில் நான் சந்தித்த அன்பரான அட்வகேட் திரு. எஸ். எம். சுப்பையா (149, சுவாமி நாயக்கன் தெரு, சென்னை-2) தெரிவித்தார். திரு. சுப்பையா தீவிரமான சிவபக்தர். கூடவே ஆவியுலகத்தோடு பேசுவதிலும் ஈடுபாடு கொண்டவர். சமீபத்தில் அவருடைய மாமியாருக்கும் (திருமதி தையல்நாயகி அம்மாள்) கருப்பை சம்

பந்தமாக மிக அபாயகரமான பிரச்சினை ஏற்பட்டது. அறுவை சிகிச்சை மூலம் கருப்பையை நீக்க வேண்டும் என்ற நிலை. அதே சமயம், அறுவை சிகிச்சை செய்தால் அந்த அம்மையாரின் உடல்நிலை தாங்குமா என்ற சந்தேகம் அனைவருக்கும். டாக்டர் ஷீலா ராஜரத்தினம் என்ற அந்தத் துறை மருத்துவ நிபுணர் மூலம்தான் சிகிச்சை செய்ய வேண்டும் என்று முடிவு செய்தனர்.

அந்நிலையில் ஆவியுலகத் தொர்டபு மூலம் திரு சுப்பையாவின் மனைவியின் அம்மாவழி பாட்டி ஒரு வாக்கு கூறினுராம். அதாவது, ''ஆபரேஷன் தேவையில்லை. காளிகாம்பாள் கோவிலுக்குப் போ, மாம்பழமே மருந்து. அங்கு அம்மன் அருள்பெற்ற குருக்கள் இருக்கிருர். அவர் மூலம் அர்ச்சனை செய். அம்பாளின் அருளோடு வேணுகோபால் என்ற டாக்டரிடம் சிகிச்சை செய். அம்பாள் குணமாக்கித் தருவாள்'' என்று கூறியது அந்த வாக்கு.

அதன்படி தம்புசெட்டித் தெருவிலிருக்கும் காளிகாம்பாள் தலத்துக்கு வந்து வழிபட்டார்கள் அக்குடும்பத்தினர். அப்போது இவர்கள் குறிப்பிட்டுக் கேட்பதற்கு முன்பே, குருக்கள் அம்பாள் பிரசாதமாக மாம்பழத்தை மந்திரித்துக் கொடுத்தார். மிகுந்த வியப்புடன் அந்தப் பிரசாதத்தைப் பெற்று, பிணியுற்றிருந்த அம்மையாரை உண்ணச் செய்தார்கள். கூடவே, அந்த அருள்வாக்கில் வந்ததுபோல் டாக்டர் வேணுகோபாலிடம் சென்று சிகிச்சை செய்ய அவர்கள் தயங்கினர். காரணம், டாக்டர் வேணுகோபால் அவர்கள் அந்த அம்மைமாருக்கு ஏற்பட்டிருந்த கருப்பை நோய்க்குச் சிகிச்சை செய்பவரல்ல. அவர் சிறுநீரக இயல் நிபுணர்.

அப்படியிருக்க, 'மேஜர் ரணசிகிச்சை செய்ய வேண்டிய நோய்க்கு இன்னொரு நிபுணரை எப்படி சிகிச்சைக்காக அணுகுவது?' இந்த எண்ணத்தில் அவர்கள் தயங்கிக் கொண்டே இருந்தார்கள். ஆனுல் பாட்டியின் ஆவியோ, ''அம்பாளின் அருள் அதுதான். அவள் வேணுகோபாலிடம்

சென்று சிகிச்சை பெற வேண்டுமென்றுதான் திருவுளம் கொண்டிருக்கிறாள். தைரியமாக அவரை அணுகுங்கள். அம்பாள் அருகிலிருந்து குணமாக்கித் தருவாள்'' என்று வற்புறுத்திக் கூறியது.

முடிவில் குடும்பத்தினர், 'அம்பாள் திருவுள்ளப்படியே செயல்படுவோம்'' என்ற உறுதியுடன் டாக்டர் வேணுகோபால் அவர்களை அணுகினார்கள். அவருக்கும் அது வியப்பாகத்தான் இருந்ததாம். ஆனால், அம்பாளின் திருவுள்ளத்தை அவரிடம் சொன்னதும் அவர் சிகிச்சையை மேற்கொண்டார். அம்பாளின் அருளால் 'கோபால்ட் ட்ரிட்மெண்ட்' மூலமே அறுவை சிகிச்சைக்கு அவசியமில்லாமல் திருமதி தையல் நாயகி அவர்களின் பிணி நீங்கிவிட்டது.

ஃ ஃ ஃ

சென்னை ராமகிருஷ்ணா நகர், திருவேங்கடம் தெரு எக்ஸ்டென்ஷன் 17-ம் எண் இல்லத்திலிருக்கும் திருமதி ராமலட்சுமி மகாதேவன், தன் வாழ்வில் அம்பாளின் அருள் பெருமையால் தான் பெற்ற அரிய பேற்றைப்பற்றிக் கூறுகிறார். அதாவது...

''எனக்குத் திருமணமாகி எட்டு ஆண்டுகள்வரை குழந்தைகள் இல்லை. சுற்றாத கோவிலில்லை. வேண்டாத தெய்வமில்லை. எத்தனையோ மருத்துவங்கள். அனைவருமே எங்களிடம் எந்தக் கோளாறும் இல்லை என்று உறுதியளித்த பின்பும் எங்கள் வாழ்வில் மலர்ச்சி உண்டாவதற்கான அறிகுறியே தென்படவில்லை. யாரேனும் என்னை அனுதாபமாய் விசாரித்தாலும், அது எனக்குச் குத்தலாகவும் எரிச்சலாகவும் இருந்தது.

''இந்நிலையில் பலர் வாயிலாக அன்னை காளிகாம்பாளின் கருணையின் திறத்தைக் கேள்வியுற்ற எனது அலுவலக மேலாளராகப் பணிபுரியும் திருமதி சௌந்தர்யா அவர்கள், தை மாதம் முதல் மூன்று வெள்ளிக்கிழமைகள்

என்னை தன்னுடன் அன்னையின் ஆலயத்திற்கு அழைத்துச் சென்றார். அவருக்கும் அவருடைய புதல்வியின் திருமணம் நிறைவேற வேண்டி ஒரு பிரார்த்தனை இருந்தது. நானும் அவரும் ராகுகாலத்தில் அன்னையின் சந்நிதியில் எலுமிச்சம் பழ விளக்கு ஏற்றி வைத்துவிட்டு, மனமுருக அன்னையின் துதிகளைப் பாடியவாறு சந்நிதியை வலம் வருவோம்.

''மூன்றாவது வெள்ளிக்கிழமையன்று என் மனதில் என்னவோ இனம் புரியாத உணர்வுகள் அலைமோதிய வண்ணம் இருந்தன. எந்தக் கோவிலிலும் இதுவரை ஏதுமே பிரார்த்தித்து அறியாத நான், என்னை அறியாமலேயே அன்னையிடம், 'தாயே! உன் தனிப் பெருங்கருணையால் எனக்கும் மழலைப்பேறு வாய்த்தால் என் குழந்தையை உன்னுடைய சந்நிதிக்கு கொண்டு வருகிறேன். உன்னுடைய திருநாமத்தையும் சூட்டுகிறேன்' என்று மனமுருக வேண்டிக் கொண்டேன்.

''என்னுடைய பிரார்த்தனை அன்னையின் திருச்செவியில் விழுந்துவிட்டது! அவள் அருள்துளி என்மேல் தெளித்ததையும், நான் அந்த மாதமே உணர்ந்தேன். நான் தாய்மையுற்றதை உணர்ந்து அன்னைக்குக் கோடிகோடி நன்றியஞ்சலி செலுத்தினேன். உரிய காலத்தில் என் செல்வ மகன் பிறந்தான்'' என்றார் திருமதி ராமலட்சுமி மகாதேவன்.

அம்பாளின் அருட்செயல்களைப் பற்றி அன்பர்கள் கூறும் போது, 'இப்படியும் நடக்குமா? இதெல்லாம் பகுத்தறிவுக்குப் பொருத்தமானதா...?' இப்படியெல்லாம் அடுக்கடுக்கான கேள்விகளை பலருக்கும் கேட்கத் தோன்றும்.

ஒரு சின்ன உதாரணம். நம்மைச் சுற்றியுள்ள பொருள்களைப் பார்க்க நமக்கு உதவுபவை நம் கண்கள். கண்கள் பார்வை குன்றினால் புதிய லென்ஸை சேர்த்துப் பார்க்கிறோம். அறவே நம்மால் பார்க்க முடியாவிட்டால் பிற புலன்களால் தொட்டுப் பார்த்து அந்தப் பொருள்களை

அறிய முயலுகிறோம். இல்லாவிட்டால் நம்மால் பார்க்க முடியவில்லையே என்று ஒதுக்கி விடுகிறோம். இதுதான் இயல்பு. இதைவிட்டு நம்மால் பார்க்க முடியவில்லையே என்ற ஒரு காரணத்திற்காகவே, 'நம்மைச் சுற்றிப் பொருள்களே இல்லை' என்று சாதிப்பது எப்படிப்பொருத்தமாகும்...?

அதுபோல் தெய்வத்தைப் பார்க்க நமக்கு உதவுவது ஒன்றே ஒன்றுதான். அதுதான் 'நம்பிக்கை.' அந்த நம்பிக்கை இல்லையென்றால், தெய்வம் பிரத்தியட்சமாக எதிரில் வந்து நின்றாலும் நாம் ஒப்புக்கொள்ளாமல், 'நீ இல்லை' என்று புறக்கணித்து விடுவோம்.

மூட நம்பிக்கையைவிட எதையும் புறக்கணிக்கும் மூட அவநம்பிக்கை ஆபத்தானது!

கடந்த ஆகஸ்டு மாதம் அன்னையின் சந்நிதியிலேயே ஒரு நிகழ்ச்சி நடந்தது. சென்னையைச் சேர்ந்த அம்பாளின் பக்தை திருமதி எஸ். சகுந்தலாநாதன் அவர்கள் வாழ்வில் நிகழ்ந்த ஒரு வியப்பூட்டும் சம்பவம் அது...

4

அன்னை காளிகாம்பாள் ஆலயத்தில் பக்தர்களின் ஈடுபாட்டிற்குத் தூண்டுகோலாகவும், ஓர் ஆதர்சமாகவும் திகழ்பவர் ஆலய சிவாச்சாரியார் திரு சாம்பமூர்த்தி அவர்கள். அவர் அம்பாளைப்பற்றிக் கூறும்போது, ''இந்த உலகத்தில் இந்தக் கலிகாலத்திலேயும், தர்மசாட்சியாக இருந்து நீதி செலுத்துபவள். அன்னை காமாட்சியின் அம்சம் கொண்டிருக்கும் காளிகாம்பாள் தான். அவள் இத்தலத்தில் நெருப்பைப்போல் தீட்சண்யமாக இருக்கிறாள். அபயமென்று மனமுருகி வேண்டுவோர்க்கு அருள் வழங்குவதிலும் சரி; பக்தர்கள் தவறு செய்யும்போது, உடனடியாகப் புத்தி புகட்டி திருத்துவதிலும் சரி, அவளைப்போல் கண்கண்ட தெய்வம் வேறு யாருமில்லை. தருமத் தீர்ப்பைத் தள்ளிப்

போடும் பழக்கமே அம்பாளிடம் கிடையாது. அருளும் சரி; அவசியமானல் தண்டனையும் சரி, உடனுக்குடன் கிடைக்கும்'' என்ருர்.

இக்கூற்றை நிரூபிப்பதுபோலவே கடந்த ஆகஸ்டுமாதம் அம்பாள் சந்நிதியிலேயே ஒரு சம்பவம் நிகழ்ந்தது. அதைப் பிரத்யட்சமாக அனுபவித்தவர், ஆலயத்தைச் சார்ந்த 'சுவாசினி சங்க' உறுப்பினரான திருமதி சகுந்தலாநாதன்.

ஒரு வெள்ளிக்கிழமையன்று அம்பாள் சந்நிதியில் பஜனை வழிபாட்டை முடித்துக்கொண்டு தன் தோழியரிடம் பேசிக் கொண்டு ஆலயத்திலிருந்து வெளியேறி திரும்பிக் கொண்டிருந்தார் திருமதி சகுந்தலாநாதன்.

அச்சமயம் மிக அதிர்ச்சியூட்டும் வண்ணம் அவருடைய வாய் ஒரு பக்கமாகக் கோணிக் கொண்டு சென்றது. நாக்கு புரளவில்லை. இதற்குமுன் அவருக்கு இப்படி ஏற்பட்டதே இல்லை.

ஆலயத்திற்குவந்து அம்பாளை பூஜித்துவிட்டுச் செல்லும் போது இப்படி ஓர் ஆபத்து ஏற்பட்டிருக்கிறதே என்று பதறிக்கொண்டே, ஆலயத்திற்குள் மீண்டும் அவரும் உட்னிருந்த தோழியர்களும் சென்ருர்கள்.

பல நிமிடங்களாகியும் வாய் சீராகவில்லை. தொலைபேசி மூலம் குடும்பத்தாருக்குத் தகவல் அனுப்பிவிட்டு, சந்நிதியிலிருந்த அனைவரும் மனக்கலக்கத்துடன் அம்பாளை வேண்டினுர்கள்.

அச்சமயம் திருமதி சகுந்தலாநாதனுக்கு சற்றுமுன் செய்த தவறு ஒன்று பளிச்சென்று நினைவிற்கு வந்தது. அதாவது, ஆலயத்தில் எல்லோரும் வழிபட்டுக்கொண்டிருக்கும்போது, மூக்கில் ஊனமுள்ள ஒரு முக்கரைய பக்தர் தெளிவற்ற குரலில்அம்பாளைத் துதித்துக் கொண்டிருந்தார். அவருடைய ஊனத்தைப் பார்த்தும், குரலைப் பார்த்தும் திருமதி சகுந்தலாநாதன் தன் தோழிகளிடம் கேலி பேசினுராம்.

அம்பாள் சந்நிதியில் ஒருவருடைய ஊனத்தை இகழ்ந்த தன் பலனை உடனடியாகத்தான் அனுபவிக்கும்படி அம்பாள் தண்டித்ததை அப்போதுதான் உணர்ந்தார் திருமதி சகுந்தலாநாதன். அதற்குள் அவருடைய தோழி சரோஜா என்பவர் அம்பாள் பிரசாதத்தை அவர் வாயில் போட்டு, கவலைப்படாதே. ஏதாவது நீ தப்பு செய்திருந்தால் அம்பாளிடம் மன்னிப்புக் கேள். அந்த தயாபரி மன்னித்துவிடுவாள். அவளைப் பக்தியோடு சேவிக்கும் உன்னைக் கைவிட மாட்டாள். மன்னித்துக் காப்பாற்றுவாள்'' என்ருர். அவ்வாறே திருமதி சகுந்தலாநாதனும் அம்பாளிடம் கண்ணீருடன் மன்னிப்புக் கேட்டவாறே பிரசாதத்தை உட்கொண்டார். என்ன ஆச்சரியம்! மறுகணம் வாய் சரியாயிற்று. நாக்கும் புரண்டது!

இதைப்பற்றிக் கூறிய திருமதி சகுந்தலாநாதன், ''அன்றிலிருந்து உடல் ஊனமுற்றேரையும்—பிணியாளர்களையும் பார்க்கும்போது, அம்பாளை நோக்கி அவர்களுக்குக் கருணை காட்டுமாறு வேண்டிக் கொள்கிறேள்'' என்கிருர் நாத்தழுதழுக்க.

ஃ ஃ ஃ

இறைவன் அருளிருத்தால் எந்த ஜாதக தோஷமும், யாரையும் எதுவும் செய்யாது என்பது இந்த அருளாளரின் வாக்கு.

இந்த அரிய உண்மை இப்போதும் நடைமுறையில் அன்னை காளிகாம்பாளை வணங்கிய ஒரு பக்தரின் வாழ்வில் நிருபணமாகியிருக்கிறது...

சென்னை சைதாப்பேட்டை ஆலந்தூர்ரோடு. 12:ம் எண் இல்லத்தில் உள்ள திரு. பி. சி. சத்யநாராயணு என்ற அன்பர், தம்புசெட்டித் தெருவிலிருக்கும் அன்னை காளிகாம்பாளின்மீது 23 ஆண்டுகளாகப் பக்தி செலுத்தி வருபவர், ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் ஆலயத்திற்குச் சென்று அம்பாளை தரிசித்து அர்ச்சனை செய்து வழிபட்டு வருபவர்.

1969-ம் ஆண்டு, அவருடைய திருமணம் சம்பந்தமாக ஒரு பிரச்சினை எழுந்தது. திரு. சத்யநாராயண தன் அத்தை மகளையே திருமணம் செய்து கொள்ள விரும்பினர். அதே போல் அப் பெண்மணிக்கும் விருப்பம் இருந்தது. பெற்றோர்களுக்கும் ஆட்சேபனை இல்லை. ஆனால், இத்நிலையில் ஜாதகம் குறுக்கிட்டது. பெண்ணுக்கு செவ்வாய் தோஷம் இருப்பதாக ஜாதகத்தில் தெரியவரவே, 'இந்த திருமணமே வேண்டாம்' என்று அனைவரும் முடிவு செய்தனர். குறிப்பாக, பெண் வீட்டுக்காரர்களே இதை ஏற்கவில்லை. பெண்ணுக்குத் தோஷமிருந்தால் மாப்பிள்ளை உயிருக்கே ஆபத்து என்பதால், பெரியவர்கள் இத் திருமணத்தை ஒப்புக் கொள்ளவில்லை. கல்யாணப் பேச்சும் நின்றுவிட்டது.

ஆனால் பெரியவர்களும்—ஜாதகமும் எதிர்ப்பாக இருந்தாலும், சத்யநாராயண மட்டும் உறுதியாக அன்னை காளிகாம்பாளை நம்பினர். சதா அம்பாளையே வேண்டி, ''தாயே; எந்தத் தோஷமிருந்தாலும் நீதான் அதை நீக்க வேண்டும். உன் அருளிருந்தால் எல்லாத் தீவினையும் அகலும். நீயே மனதுவைத்து எங்கள் விருப்பப்படியே எங்கள் திருமணத்தை நடத்திவை?'' என்று மனமுருகி வழிபட்டார்.

கல்யாணப் பேச்சு நின்று, 'இந்தத் திருமணம் நடக்கவே கூடாது' என்று இருதரப்புப் பெரியவர்களும் தீர்மானமாக முடிவு செய்த பின்னும், சத்யநாராயண மாத்திரம் மிகவும் பிடிவாதமாக அம்பாளைத் துதித்து, திருமணத்தை நடத்தித் தரும்படி தொடர்ந்து வழிபட்டுக் சொண்டிருந்தார். ஓராண்டு காலம் கடந்தும், 'அம்பாள் அருள் தருவாள்' என்ற தன் வைராக்கியத்தில் தளர்ச்சியுருமல் அம்பாளை வேண்டிக் கொண்டே இருந்தார்.

முடிவில் அவருடைய பக்தியே வென்றது! முற்றிலும் எதிர்பாராத வண்ணம் திடீரென்று ஒருநாள் பெண் வீட்டுக்காரர்கள் தாமாகவே முன்வந்து, 'அம்பாளின் மீது பாரத்

தைப் போட்டு திருமணத்தை நடத்தி விடலாம்' என்று முடிவுக்கு வந்தார்கள். அதன்பேரில் திருமணம் நிகழ்ந்தது.

அத்திருமணம் நிகழ்ந்து இப்போது பத்து வருடங்களுக்குமேல் ஆகிவிட்டது. அவர்களுக்கு எவ்விதச் குறையும் ஏற்படவில்லை. மூன்று குழந்தைகளும் இருக்கிறார்கள். திரு. சத்யநாராயணா, ''தன் பக்தனுக்காக என் தாய் காளிகாம்பாள் என் விதியையும் ஜாதகத்தையும் மாற்றி, என் வாழ்க்கையில் அருள் புரிந்து விட்டாள்'' என்கிறார் பக்தி நெகிழ்ச்சியுடன்.

5

சில வருடங்களுக்கு முன் காளிகாம்பாள் ஆலயத்தில் நடந்த சம்பவம் இது...

அந்த வருடம்தான் காளிகாம்பாள் கோவிலில் முதன் முதலாக 'புஷ்பாஞ்சலி' ஆரம்பித்திருந்தனர். புஷ்பாஞ்சலி என்பது, பொங்கலன்று கோவிலின் பிரகாரத்தைப் புஷ்பத்தால் அலங்கரித்து, வண்ண மாவாலும் புஷ்பத்தாலும் தேவியின் திருவருவத்தை கோலமாக வரைந்து வைத்து வழிபடுவது.

அந்த வருடம் டிக்கெட் வைத்து கூட்டத்தைச் சீர்படுத்தியிருந்தனர். இரவு ஒன்பது மணிக்கு மேல் கோவிலுக்கு வந்த திரு. டி. எஸ்.மீனாட்சிசுந்தரம் என்ற அன்பருக்கு இதனால் ஒரு பிரச்சினை உருவாகியது. அவர் கப்பல் துறையில்(**Madras Dack Board**) உயர்நிலை எழுத்தராகப் பணி புரிபவர். தேவியின் ஆலயத்துக்குத் தினந்தோறும் வருபவர். அம்பாளைத் தரிசிக்காமல் தூங்க மாட்டார். அப்படிப்பட்டவர், அன்று கையில் சில்லறை கொண்டு வராததால் அம்பாளைத் தரிசிக்க முடியாத சூழ்நிலை...யாரிடமும் பணம் கேட்க வெட்கம். தினம் தேவியை தரிசிக்காமல் உறங்காத அவருக்கு அவளைத் தரிசிக்காமல் விட்டுச் செல்வது மிகவும் வேதனையாக இருந்தது.

வெளிப்பிரகாரத்தை பிரதட்சணம்செய்துவிட்டு!அம்மனுக்கு நேராக உள்ள துவஜஸ்தம்பம் அருகில் நின்று, 'அவள் தரி சனம் கிடைக்குமா' என்று ஏக்கத்துடன் பார்த்தார். ஒரே கூட்டம்' அலேஅலேயாகத் தலேகள்தான் தெரிந்தது. அப் படியே அங்கேயே உட்கார்ந்தார். அவருடைய கண்களில் கண்ணீர் மல்கியது.

அப்பொழுது ஓர் அம்மா அங்கே தோன்றி அவரை அழைத்தாள். பச்சை நிற நூல் புடவை: கழுத்தில் பவள மாலே. எளிய தோற்றம். அவள் பழுத்த வயதான சுமங்கலி. கறுப்பாக இருந்தாள், கண்களில் சாந்தம். நெற்றி நிறைய குங்குமம்.

''ஏண்டா வருத்தப்படுகிருய்...நான் குங்குமம் தரு கிறேன். இட்டுக் கொண்டு வீட்டிற்குப் போ!'' சென்ரு ளாம். வாங்கி அணிந்து கொண்டு சென்ற அவருக்கு அப் போதும் மனம் முழுவதும் சமாதானமடையவில்லே. தூக்கம் பிடிக்காமல், 'உன் தரிசனம் கிடைக்காமல் போய் விட்டதேயம்மா!'' என்று படுக்கையில் பிதற்றிக்கொண்டி ருந்தார். எப்பொழுது உறங்கினர் என்று தெரியவில்லே. திடீரென்று இவருக்கு ஒரு கனவு. அதில் அதே பெண்மணி பச்சைநிறப் புடவையுடன் தோன்றி, ''அதான் நான் குங்குமம் கொடுத்தேனே...? இன்னும் என்ன குறை! இதில் சந்தோஷமில்லேயா...?'' என்று கேட்டதும் தான் அவருக் குப் புரிந்தது., எளியோர்க்கு எளியாளான அன்னே காளி காம்பளே அந்தப் பெண்மணி உருவில் தனக்காக அப்படி வந்து பிரத்யட்சமாய் காட்சி கொடுத்தாள் என்று!

அதேபோல் மற்ருெரு நாள்...அன்று பிரதோஷம்—

அர்ச்சனே செய்துவிட்டு அம்பாளுக்கு முன்னுல் உருகி நின்ருர் அவர். அம்மா என்று அவளே பாவித்ததனுல், அவள் மீது உரிமையுடன் ஒரு கோபம் வந்தது. அவருடைய தாயாருக்கு இருதய நோய். மற்றும் வீட்டில் பல நெருக்கடி யான பிரச்னேகள்...''நீ வெறும் கல்தானு...உனக்கு காதே

கேட்காதா? என் குறைகள் உன் காதில் விழாதா?'' என்று அவள் சன்னிதியில் குமுறிக் கொண்டிருந்தார். அச்சமயம் அவர் கண்காண ஓர் அதிசயம் நிகழ்ந்தது. அம்பாளின் காதில் சாத்தியிருந்த கவசம், புஷ்பத்துடன் 'டங்' என்ற சப்தத்துடன் விழுந்தது. திரு. மீனுட்சி சுந்தரத்துக்கு தேகம் புல்லரித்தது! 'உன் குறைகள் என் காதில் விழுந்தது என்று காண்பிக்க, என் கவசத்தையும் கழற்றிவிட்டுக் கேட்டேன்' என்று என் தாய் சொல்லாமல் சொன்னதுபோல இருந்தது. அதேபோல் அவள் அவருடைய குறைகளை எல்லாம் கேட்டதற்கு அடையாளமாக அவை அனைத்தும் உடனடி நீங்கி விட்டனவாம்!

ஃ ஃ ஃ

திருவல்லிக்கேணி எஸ். எம். வி· கோயில் தெரு 46-ம் எண் இல்லத்திலுள்ள திருமதி சீதா கிருஷ்ணசாமி கூறுகிறார்.

''சுமார் 1966-ம் வருடம் அக்டோபர் மாதம், எங்கள் மகள் முத்துலட்சுமிக்கு ஒன்றரை வயதாக இருந்தபோது, திடீரென்று காய்ச்சல் கண்டு—அது மூளைக்காய்ச்சலாக மாறி, கோமா நிலை ஏற்பட்டு சுயநினைவில்லாமல் போய் விட்டது. இரண்டு வாரம் சென்னை கோஷா ஆஸ்பத்திரியில் சேர்த்து இருந்தராம். ஆஸ்பத்திரியில் பெரிய டாக்டர்கள் எவ்வளவோ முயற்சி செய்தும் நிலைமை சீரடையாமல், 'குழந்தையை வீட்டிற்கு எடுத்துச் செல்லலாம்; பிழைக்க மாட்டாள்!' என்று கூறிவிட்டார்கள். அது சமயம் தங்க சாலைத் தெருவில் உள்ள இராமலிங்க அடிகளார் மடத்தில் இருந்த ஸ்ரீலஸ்ரீ மௌனகுரு சுவாமிகளிடம் என் கணவரை ஒரு சிநேகிதர் அழைத்துச் சென்று விவரம் கூறினர். சுவாமிகள் இந்தக் காளிகாம்பாள் ஆலயத்துக்கு என் கணவரை கூட்டி வந்து, அம்பாளிடம் பிரார்த்தனை செய்து 'அம்பாளின் குங்குமப் பிரசாதத்தைக் கொண்டுபோய் குழந்தையின் நெற்றியில் இட்டுவிடும்'படிக் கூறினர்.

அதன் படியே என் கணவரும் செய்தார். நெற்றியில் குங்குமம் இட்ட சில மணி நேரத்தில் குழந்தை கண்விழித்து, 'அம்மா' என்று எழுந்தாள். டாக்டர்கள் எல்லோரும், 'இது கடவுள் செயல் அல்லாது வேறில்லை!' என்று கூறி அதிசயப்பட்டார்கள். பிறகு பூரணமாகி மூன்று நாளில் வீட்டிற்கு அழைத்து வந்ததும், குழந்தையை அம்பாளின் ஆலயத்துக்கு அழைத்துச் சென்றோம். அங்கு குழந்தை ஓடியாடி உல்லாசமாக விளையாடிக் கொண்டிருக்கும் சமயம் ஒரு வயதான சுமங்கலி குழந்தையிடம் ஒரு வாழைப் பழத்தைக் கொடுத்து உண்ணச் செய்தாள். எங்களுக்கு அந்தக் காட்சி அம்பாளே அந்த உருவில் வந்து அதை குழந்தையிடம் கொடுத்து உண்ணச் செய்ததுபோல் இருந்தது'' என்கிறார் பரவசத்தால் உள்ளம் பூரிக்க.

பல திருக்கோயில்களில் இசை நிகழ்ச்சி நடத்தி வருபவரும், 'இன்னிசைச் செல்வர்' என்று பெயர் பெற்றவருமான சென்னையைச் சேர்ந்த பட்டினப்பாக்கம் யு—16 எண் இல்லத்தில் இருக்கும் திரு எஸ். சிவராமகிருஷ்ணன், தனக்கு ஏற்பட்ட ஓர் அனுபவத்தைக் கூறுகிறார்...

கடந்த அக்டோபர் மாதம் 5ம்தேதி நவராத்திரியை ஒட்டி அன்னை காளிகாம்பாள் ஆலயத்தில் அவருடைய இசைக்கச்சேரிக்கு ஏற்பாடாகியிருந்ததாம். ஆனால், நிகழ்ச்சிக்கு முந்தின நாள்—அதாவது 4-ம் தேதி—பிற்பகலில் இருந்து அவருக்குக் கடுமையான ஜுரம். படுக்கையிலிருந்து எழுந்திருக்க முடியாத அளவு உடல் வலி. மறுநாள் கச்சேரியை கான்சல் செய்ய வேண்டியதுதானா என்று சஞ்சலப்பட்டுக் கொண்டே இரவில் படுத்துக் கொண்டிருந்தாராம்.

அந்நிலையில் விடியற்காலை சுமார் ஐந்து மணி வாக்கில் அவருக்கு ஒரு கனா தோன்றியதாம். அதில் ஒரு வயதான சுமங்கிலி அம்மாள் வந்து, 'கவலைப்படாமல் என் இடத்திற்கு வா' என்று கட்டளை இட்டது போலிருந்ததாம்.

திரு சிவராமகிருஷ்ணனுக்கோ ஒரே குழப்பம். கனவில் வந்தது ஒருவேளை அம்பாள்தானோ என்று அவருக்குத் தோன்றினாலும் கூடவே அவநம்பிக்கையும் ஏற்பட்டது. அம்பாள் அப்படிக் கூறியிருந்தால் ஜுரம் விட்டிருக்க வேண்டுமே...அதற்கு மாறாக காலையில் ஜுரம் முன்னிலும் அதிகமாகவே இருந்தது. மாலைவரை ஜுரம் விடவேயில்லை.

மாலையில் கோவிலுக்குப் போன் செய்து கச்சேரியைக் கான்சல் செய்துவிடலாம் என்ற எண்ணம் தோன்றியது. அவ்வளவு மோசமாக இருந்தது உடல் நிலை. கடைசியில் அவர் மனதில் திடீரென்று ஒரு வைராக்கியம் ஏற்பட்டது. 'கனவில் வந்த அம்பாள் சந்நிதிக்கு வரும்படி கூறியபடியே துணிந்து அம்பாள்மீது பாரத்தைப்போட்டுப் புறப்பட்டால் என்ன...?'

அந்த வைராக்கியம் மெல்ல மெல்ல வலுப்பெற்றது. நடுங்கும் உடம்புடன் ஜுரம் குறையாத நிலையிலேயே கச்சேரிக்குப் புறப்பட்டு விட்டார். இப்படி ஓர் உடல்நிலையில் பாட முடியுமா என்ற பயம் மனதுக்குள் அலைக்கழித்துக் கொண்டிருந்தது. இருந்தாலும் அவர் வைராக்கியத்தை தளரவிடவில்லை.

ஆலயத்திற்குச் சென்று, அம்பாள் சந்நிதியில் குங்குமம் பெற்று அதை அணிந்து கொண்டார். 'தாயே, எல்லாம் உன்பாரம்'' என்று பிரார்த்தித்தவாறு சச்சேரியில் உட்கார்ந்துவிட்டார்! இரண்டே நிமிஷத்துள் அவருக்கு குப்பென்று வியர்த்த மாதிரி இருந்ததாம். அதுவரை கொதித்துக் கொண்டிருந்த ஜுரம், பளிச்சென்று தணிந்து கச்சேரியும் அவர் எதிர்பார்த்ததற்கு மேலாக வெகு சிறப்புடன் அமைந்துவிட்டதாம்!

—இதை நெகிழ்ச்சியுடன் கூறிய சிவராமகிருஷ்ணன்,

''அம்மா காளிகாம்பா மகா வரப்பிரசாதி. நம்பிவிட்டால் அவள் யாரையும் கைவிடமாட்டாள்!'' என்கிறார்.

7

'காஞ்சியில் இருக்கும் அன்னை காமாட்சியின் அம்சமே, சென்னை தம்புசெட்டித் தெருவில் (212-ம் எண்ணில்) எழுந்தருளியிருக்கும் காளிகாம்பாள்!' என்று ஓர் தெய்வீக வரலாற்றில் கூறப்பட்டிருக்கிறது.

இதை மெய்ப்பிக்கும் வகையில் ஒரு சம்பவம் நிகழ்ந்திருப்பதைப்பற்றி சென்னை தியாகராயநகர் ஜி. என். செட்டி சாலை, 124-ம் எண் இல்லத்திலிருக்கும் திருமதி ஜெயலட்சுமி கூறுகிறார்...

காஞ்சியில்—

பிறவி ஊமையான ஒருவர், அன்னை காமாட்சியைத் தொழுது, அவள் அனுக்கிரகத்தால் பேச்சுத் திறன் பெற்று, அதன் பயனாய் 'மூகபஞ்சசதி' என்னும் சுலோகங்கள் பலவற்றை அம்பாள் பேரில் பாடிப் பெரும்பேறு பெற்றார்.

கிட்டத்தட்ட இப்படி ஒரு சம்பவம் அன்னை காளிகாம்பாள் திருத்தலத்திலும் ஏற்பட்டிருக்கிறது.

திருமதி ஜெயலட்சுமியின் மருமகளான செல்வி என்ற குழந்தைக்கு மூன்று வயதுவரை பேசும் திறன் ஏற்படவில்லை. இதைப்பற்றி பெற்றோர், உற்றார் அனைவரும் வேதனையுற்று தம் சக்திக்குட்பட்ட அனைத்து மருத்துவ சிகிச்சைகளையும் மேற்கொண்டனர். எதனாலும் குழந்தைக்குப் பேச்சுத் திறன் வரவேயில்லை.

இந்நிலையில் திருமதி ஜெயலட்சுமி குழந்தையை அழைத்துக்கொண்டு காளிகாம்பாள் ஆலயத்திற்குச்சென்று அங்குள்ள சிவாச்சாரியார் திரு சாம்பமூர்த்தி குருக்களிடம் குழந்தையின் நிலையைப்பற்றி வேதனையுடன் கூறினர்.

அப்போது சிவாச்சாரியார், ''நம்பிக்கையோடு அம்பிகையை வழிபடுங்கள். அவள் நினைத்தால் எந்த அற்புதத்தையும் நிறைவேற்றி வைப்பாள். நானும் அவள் கருணையை வேண்டிப் பிரார்த்தித்துப் பிரசாதம் தருகிறேன்'' என்றவாறு தினந்தோறும் அம்பாளை நினைத்துப் பிரார்த்தித்து, குங்குமப் பிரசாதத்தைக் குழந்தையின் நாவில் வைத்து ஆசிர்வதித்து வந்தார்.

திடீரென்று ஒன்பதாம் நாள் அந்த அற்புதம் நிகழ்ந்தது.

ஆம்; அன்று சிவாச்சாரியார் குங்குமப் பிரசாதத்தை இட்டதும் திருமதி ஜெயலட்சுமியின் கையிலிருந்த குழந்தை செல்வி தட்டுத்தடுமாறி மழலையுடன் திருமதி ஜெயலட்சுமியை நோக்கி ''அத்தே!'' என்று அம்பாளின் சந்நிதியில் அழைத்தது.

அன்றுமுதல் குழந்தையின் பேச்சுத் திறன் வளர்ந்து, இன்று சரளமாகப் பேசுகிறாள். நர்ஸரிப்பள்ளியில் படிக்கும் அவள், இப்போது ஆங்கிலத்திலும் தமிழிலும் அழகாகப் பாடங்களை வாசிப்பதைக் கண்டு, ''இந்தக் குழந்தை பேசும் ஒவ்வோர் சொல்லிலும் அன்னை காளிகாம்பாளின் கருணையைக் கண்டு மெய்சிலிர்க்கிறோம்'' என்று பூரிப்புடன் கூறுகிறார் திருமதி ஜெயலட்சுமி.

ஃ ஃ ஃ

தன்னை வந்தடையும் ஜீவகோடிகளுக்கெல்லாம் வாழ் வளித்து உய்விக்கும் உலக நாயகியான அன்னை காளிகாம் பாள் ஆலயத்திற்கு, பல வரலாற்று நாயகர்களும்— அருளாளர்களும் வந்து தொழுது அருள் பெற்ற செய்தியை சில ஆதாரங்களைக் காட்டிப் பெருமிதத்துடன் தெரிவித் தார் அறங்காவலர் குழுத் தலைவரான திரு. டி. எஸ். ராஜப்பா. விஸ்வகர்மா இனத்திற்குப் பாத்தியப்பட்ட இந்த ஆலயத்தில், இனப்பேதமற்று மாமன்னர் முதல் சாமான்ய மக்கள்வரை வந்து அன்னையின் அருள்பெறும் பெருமிதம் அவர் பேச்சில் இருந்தது. (திரு. ராஜப்பவுடன் அறங்காவவர்களாகப் பணிபுரியும் மற்றவிசுவகர்மா சமூக அன்வர்கள்—திரு. என். எஸ். ருத்ர கோடி, திரு. டி. வி, ராமமூர்த்தி, திரு. பி. சி. சண்முகாச் சாரியார், திரு. சி. ஆர். முருகேச ஆச்சாரியார் ஆகி யோர்.)

திரு. ராஜப்பா காட்டிய குறிப்புக்களில் ஒன்று, 'மராட் டிய மாவீரன் சத்ரபதி சிவாஜியின் 351-வது பிறந்தநாள் விழா மலர்.'

'ஹிந்து சாம்ராஜ்யம்' கண்ட மாவீரன் சிவாஜியின் பிறந்த நாள் விழாவை அன்னை காளிகாம்பாள் ஆலயத் தோடு இணைத்து, மராத்திய அன்பர்களும் தமிழ்ப் பெரி யார்களும் கொண்டாடியிருப்பது ஒரு புதுமையான கண் ணோட்டமாகத் தோன்றியது.

அவர்கள் அவ்வாறு கொண்டாடியதற்குக் காரணம், அந்த மராட்டிய மாவீரன் சிவாஜி அன்னை காளிகாம்பாளின் ஆலயத்துக்கு வந்து தொழுது அருள் பெற்றதுதான்.

கி. பி. 1676 முதவ் 1680 என்ற காலகட்டத்தில் சென்னை மதராஸ் குப்பம் 'மராட்டா குப்பம்' என்று வ ழங் கப்பட்டது. காரணம், அப்போது ஆட்சியரங்கில் தலைதூக்கி யிருந்த ஆங்கிலேயரையும்—முகம்ம்தியரையும் கட்டுப் படுத்த மராட்டிய வீரர்கள் சென்னைக்கு வந்து தங்கியிருந் தார்கள். அவர்களை இங்குள்ள இந்துக்கள் உப

சரித்து வரவேற்று தங்க இடமளித்திருந்தனர். விஸ்வ கர்மா—பேரிச்செட்டி இனத்தவர்கள், தங்கள் இல்லங்களையே காலி செய்து அந்த மராட்டிய வீரர்களுக்கு அளித்திருந்தனர்.

இத்தகைய உற்சாகமிக்க வரவேற்பை மராட்டிய வீரர்கள் பெற்றதற்குக் காரணம், மராட்டிய மாமன்னன் சிவாஜி, இந்த புண்ணியத் திருநாட்டில் இந்துக் கலாசாரத்தை நிலைநாட்டி 'ஹிந்து சாம்ராஜ்யம்' கண்ட சாதனை நாயகனாகத் திகழ்ந்ததுதான்.

இத்தகு பெருமைமிகு சிவாஜி மாமன்னன் 1677-ஆண்டு அக்டோபர் மாதம் மூன்றும் தேதி சென்னைக்கு வருகை தந்தார். இங்கு வருவதற்கு முன்பு பரங்கிப் பேட்டை, செஞ்சிக் கோட்டை, காஞ்சிபுரம் முதலிய பகுதிகளில் இருந்த அந்நிய ஆதிக்கத்தை ஒடுக்கி, வெற்றியுடன் சென்னைக்கு விஜயம் செய்தார். அவர் வருகையைக கேட்டு ஆங்கிலேயர் அஞ்சி டுங்கி தம் கோட்டைக்குள்ளயே பதுங்கி இருந்தனர். சென்னைக்கு வெற்றி விஜயம் புரிந்த சிவாஜி, வீரச் சாதனைகளுக்கு ஆதர்சமாக அன்னையின் அருளைப் பெற்றது, இந்த ஆலயத்தில்தான்.

மாமன்னன் சிவாஜியின் இஷ்ட தெய்வம் தேவிபவானி. தமது ஒவ்வொரு செயலுக்கும்—சாதனைக்கும் வழிகாட்டுதலாகவும் பலமாகவும் அவர் கொண்டிருந்தது தேவிபவானியின் அருளைத்தான். அந்த மாபெரும் சக்தி உபாசகரான வீரரை சென்னையில் ஈர்த்து அருள் வழங்கியவள், அன்னை காளிகாம்பாள். அவளை சிவாஜி வழிபட்ட நிகழ்ச்சி, அப்பகுதியில் ஒரு வரலாற்றுச் செய்தியாக இன்றும் திகழ்கிறது.

வரலாற்றுப் புகழ்பெற்ற மாமன்னன் சிவாஜியைப் போல், தற்போது ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் பல வெளிநாட்டு அமைச்சர்களும் இந்தஆலயத்தில் ஈடுபாடும் பக்தியும் கொண்டு இருக்கிறார்கள் என்ற தகவலை சிவாச்சாரியார்

தெரிவித்தார். மலேஷிய அமைச்சர்களான பொன். சம்பந்தம், தத்தோ. சாமிவேலு ஆகியோர் காளிகாம்பாள் மீது மிகுந்த ஈடுபாடு கொண்டவர்களாம். தமிழ்நாட்டிற்கு அவர்கள் விஜயம் செய்யும்போதெல்லாம் தவருமல் அம்பாளைத் தரிசித்துச் சொல்வார்களாம். சமிபத்தில் திரு. பொன். சம்பந்தம் அவர்கள் தன் பேரக் குழந்தைகளுக்கு இங்கு வந்துதான் முடியெடுத்தாராம்!

ஃ ஃ ஃ

இதிகாச காலந்தொட்டு இன்று வரை தம்மைச் சரணடைந்த ஜீவகோடிகளுக்கு சர்வமங்களங்களையும் அளிக்கும் ஜகன்மாதா, ஸ்ரீசக்ர மந்திர அதிபதியாய் திகழ்ந்து அருள் இருக்கை கொண்டிருக்கும் இந்தத் திருத்தலத்திற்குள் நுழையும்போதே, நம் ஜகன்மாதா புண்ணியங்கள் அனைத்தும் சுகிர்தமாய் திரண்டு நம்மை ஆட்கொள்வதுபோல் உள்ளம் சிவிர்க்கிறது. ஒருவித தெய்வீக ஆகர்ஷத்துடன் அன்னையின் ஆலயத்தை வலம் வருகிருேம்.

கடலை நோக்கி, கிழக்கு முகவாசல் கொண்டிருக்கும் இந்த ஆலயத்தில் அம்பாளோ மேற்கு முகமாக சந்நிதி கொண்டிருக்கிருள்.

பிரகாரத்தில் தென்மேற்கு மூலையில் தனிமையில் இருக்கும் விநாயகப் பெருமான், பிரகாரத்தின் வடமேற்கு முனையில் சித்திபுத்தி விநாயகராகதம் மனைவிகளுடன் கொலுவிருக்கிருர்! அவர் அருகே அகோரவீரபத்திரன் சந்நிதி அமைந்துள்ளது.

''இந்த அமைப்பு இந்தத் தலத்தில் ஓர் அபூர்வ சக்தி கொண்டிருக்கிறது. அதைப் புரிந்து கொண்டு இந்த மூர்த்திகளை வழிபட்டால், இத் தலத்துக்கு வரும் மக்கள் அனைத்து இகபர சௌபாக்கியங்களையும் பெறுவார்கள்'' என்று கூறிய சிவாச்சாரியார், அந்தச் சிறப்புக்களையும்—வழிபாட்டு முறைகளையும் விவரித்தார். அதாவது...

8

அன்னையின் ஆலயம் அனைத்துக் கோடி உயிர்களுக்கெல்லாம் ஓர் ஆதர்சம். ஊரின் நடுவில் உயரமாய் அவள் ஆலயம் இருந்தால், நம் பார்வையையே உயர்த்தி வைப்பாள் அவள். ஆம்; 'அற்ப லௌகிகத்தில் திளைத்து உழன்று கொண்டிருக்கிறாயே, உன் பார்வையை, உன் சிந்தனையை உயர்த்தி என்னைப் பார்! என் அருள் உனக்கு உண்மையான இன்பத்தின் உயர்வைக் காட்டும்!' என்று சொல்லாமல் சொல்வதுபோல் நம் கண்ணோக்கை, வாழ்வின் இலக்குகளை உயரச் செய்கிறாள்.

அதேபோல்—'அம்பாளின் ஆலயம் நம் காவலுக்கே ஓர் ஆதர்சம்' என்று ஓர் செய்தியைத் தெரிவிக்கிறார் பிராட்வேயிலிருக்கும் திருமதி மீனாட்சி சிதம்பரம். (திரு. சிதம்பரம் 'பாம்குரோவ்' ஓட்டலில் அக்கவுண்டண்டாக இருப்பவர். அவருடைய மனைவி திருமதி மீனாட்சிதான் இச்செய்தியைக் கூறியவர்.)

திருமதி மீனாட்சி சிதம்பரம் சுவாசினி சங்க உறுப்பினர். மார்கழி மாதத்தில் விடியற்காலை ஐந்து மணிக்கெல்லாம் ஆலயத்துக்கு வந்து பஜனை-வழிபாடு இவற்றில் ஈடுபட்டு விடுவார்கள், சுவாசினி சங்கத்தினர்.

அதன்படி கடந்த ஆண்டுக்கு முந்திய ஆண்டு, மார்கழி மாதத்தில் அன்னை காளிகாம்பாளைத் தரிசிக்க விடியற்காலை நாலரை மணிவாக்கில் வீட்டிலிருந்து புறப்பட்டு வந்த திருமதி மீனாட்சிசிதம்பரம் அவர்களுக்கு ஓர் அனுபவம்...... வீட்டை விட்டுச் சிறிது தொலைவு நடந்து வந்திருப்பார், பொழுது புலராத நிலையில் இறுக்கமான பனி படர்ந்த இருள், அந்நிலையில் தொலைதூரத்தில் இருந்த ஆலய நோக்கில்—அம்பாளின் நினைவில் தனியாக நடந்து கொண்டிருக்கிறார் திருமதி மீனாட்சி. அப்போது அவர் கழுத்தில் பத்துப் பவுன் பெறுமான சங்கிலியும், இன்னும் ஆபரணங்களும் இருக்கின்றன...

திடீரென்று ஒருவன் சைக்கிளில் திருமதி மீனுட்சி அருகே வந்து சங்கிலியைக் கைப்பற்ற கையை வைத்துத் விட்டான்...அந்த நிலையில் கூச்சலிட்டாலும் காப்பாற்ற தெருவில் ஆளில்லை. கண்ணுக்கெட்டிய தூரம்வரை இருள்... அரவமில்லாத வெறுமை...ஆனுல், திருமதி மீனுட்சியோ அம்பாளை நினைத்துக் குரல் கொடுத்துவிட்டுப் பேசாமல் நின்றுவிட்டார்.

ஆனுல் என்ன ஆச்சரியம்! சங்கிலியைக் பற்றுவதற்குக் கைவைத்த திருடன், அதைக் கைப்பற்ற முயற்சிக்காமலே போய்விட்டான். அந்த இடத்தில். அந்தச் சூழ்நிலையில் அவன் மிகச்சாதாரணமாகத்தன்வழிப்பறியை நிறைவேற்றி யிருக்க முடியும்...ஆனுல் முதலில் முயன்ற அவன் பின் சாதாரணமாகப் போய்விட்டான்.

ஏன்? அதனைத் தடுத்தது என்ன...? எந்த சக்தி அவன் மனத்தை மாற்றி திருமதி மீனுட்சியின் அணிகளைக் காப் பாற்றியது!

''அம்மா காளிகாம்பாளின் நாமம்தான் என்னைக் காத்தது. அவளை நினைத்ததுமே எனக்கு அசுர பலம் வந்து விட்டது. அவனே அவள் பெயரைக் கேட்டு ஒடுங்கி விட்டான்! அதற்குப் பின்னும் அருகிலிருந்த வீட்டுக்குச் செல்லவில்லை. தொடர்ந்து அந்த இருளில் தனிவழியே ஆலயத்துக்குச் சென்றேன்...மனதில் எந்தப்பயமும் தோன்ற வில்லை. அவள் நினைவுதான் ஓர் உறுதியாக இருந்தது'' என்கிருர் திருமதி மீனுட்சி சிதம்பரம்.

'அம்பாளின் ஆலயத்தில் வடமேற்குப் பகுதியில் துணைவிகள் சமேதரராக இருக்கும் அபூர்வ சித்திபுத்தி விநாயகரைக் காணும் பேறே, பாக்கியம்' என்ற சிவாச் சாரியார், அருகிலிருக்கும் அகோர வீரபந்திரசுவாமியின் சந்நிதியின் மகிமையைப் பற்றிக் கூறுகிருர். ''பௌர்ணமி நாளன்று அகோர வீரபத்திரசுவாமிக்கு

வெற்றிலைக் காப்பு சாத்தினால், பில்லி சூன்யம், பேய் பிசாசு எது பற்றியிருந்தாலும் உடனே விலகிவிடும். இது கண்கூடாக நிகழ்ந்திருக்கிறது'' என்று.

சிங்கப்பெருமாள் கோயிலிலிருந்து 6கல் தொலைவிலுள்ள அனுமந்தபுரம் கிராமத்தில் எழுந்தருளியிருக்கும் அகோர வீரபத்திரசாமி கோவிலில் அப்படி வெற்றிலைக் காம்பு சாத்தினால் திருமணமாகாத பெண்களுக்கு உடனடியாக திருமணம் நிச்சயமாகும் என்று ஓர் ஐதீகம் உண்டு...அதை நினைவூட்டியது சிவாச்சாரியார் கூறிய வாக்கு. ''கல்யாண மாகாத குறை நீக்குதல் பிள்ளைபேறில்லாத குறை நீக்குதல் போன்ற பெண்களின் பிரச்சினைகளுக்கு இந்த ஆலயத்தில் அம்மாவின் அருள் நோக்கே போதும். இங்கு வந்து பிரார்த் தித்தவர்களுக்கு இந்தக் குறைகள் உடனடியாகப் பரிகாரம் பெறும்'' என்றார் சிவாச்சாரியார்.

'உள்ளம் உருகுதய்யா' என்று பக்தர்கள் மத்தியில் ஒரு மெல்லிசைப் பிரபலமாகியிருக்கிறதல்லவா? அதை 1952-ல் அன்னை ஸ்ரீஆண்டவன் பிச்சி என்பவர் இந்த ஆலயத்தில் அமர்ந்துதான் பாடினாராம். வடக்குப் பிரகாரத்தில் அந்தப் பாடலை அப்படியே பதிப்பித்திருக்கிறார்கள்.

பிரதட்சணமாகப் பிரகாரங்களைச் சுற்றி, அன்னையின் சந்நிதிகளுக்குச் செல்லும்போது, முதன் முதலில் எதிர்ப் படுவது உற்சவர் சந்நிதி. பார்வதி—லட்சுமி—சரஸ்வதி ஆகிய மூன்று சக்தி அம்சங்களும் பூண்டிருக்கும் அன்னை காளிகாம்பாளின் உற்சவத் திருவுருவைத் தரிசிக்கும்போது, இன்னொரு அபூர்வத் தரிசனமும் நமக்குக் கிட்டுகிறது. அந்தச் சந்நிதியில்தான் சிவாச்சாரியார் திரு. சாம்பமூர்த்தி குருக்களின் ஆன்மபூஜா மரகதலிங்கமும் அமைந்துள்ளது. முன்பு தற்போதைய சிவாச்சாரியாரின் தந்தை திருமழிசை சண்முகம் சிவாச்சாரியார் வழிபட்டு வந்தாராம். தொடர்ந்து திரு. சாம்பசிவ சிவாச்சாரியார் தன் அறப்பணி களுக்கு ஆதர்சமாக அந்த ஆன்மபூஜையில் ஈடுபட்டிருக் கிறார்.

சிவாச்சாரியாரின் அபூர்வத் தொண்டைப்பற்றி ஆலய அறங்காவலர் குழுவினர், ''எங்கள் ஆலயத்திற்கு வரும் பக்தர்கள் ஒவ்வொருவரிடமும் ஜாதி-மத பேதமின்றி கனிவுடன் பழகி, அம்பாள் பேரில் பிரசாதம் அளித்து, அவர்கள் குறைகள் நீங்க தானே உள்ளமுருக பிரார்த்தித்து ஒரு தெய்வீக வழிகாட்டியாகத் திகழ்பவர் அவர்!'' என்கிறார்கள்.

ஆன்மீக ஈடுபாடு கொண்டவர்களுக்கு திரு. சாம்ப மூர்த்தி சிவாச்சாரியாரின் பெயர் புதிதல்ல. உலகில் எந்தப் பகுதியில் முக்கியமான கும்பாபிஷேக நிகழ்ச்சி நடந்தாலும் அதில் கலந்து கொள்ளும் ஒரு முக்கிய நபர் இவராக இருப் பார். பன்னிரண்டு தடவைகளுக்கு மேலாக வெளிநாடு சென்றது. அங்கங்கே கும்பாபிஷேகம் நடத்தி வைக்கத் தான். இந்தக் கும்பபிஷேகத்தில் வரும் தட்சிணை வருமானத்தை என்ன செய்வாராம் தெரியுமா...? அதில் மாதத்தில் ஒரு கும்பாபிஷேகம் தட்சிணை மட்டும் அவர் குடும்பத்துக்கு: (12 குழந்தைகள் கொண்ட குடும்பம் அவரு டையது) மீதி அம்பாளுக்கு!

இப்படி ஒரு சீலரான சிவாச்சாரியார் மூலம் ஓர் அபூர்வ—ஆன்மிக வட்டத்தையே தன்னைச் சுற்றி அன்னை காளிகாம்பாள் உருவாக்கி அமைந்திருப்பது ஓர் ஒப்பற்ற புனிதச் சிறப்பு இந்த ஆலயத்தில்...

உற்சவர் சந்நிதியைக் கடந்து வடக்குப் புறமாக சென்று, தனியாக மேற்கு நோக்கி சந்நிதி கொண்டிருக்கும் அன்னை காளிகாம்பாள் எதிரே நிற்கிறோம்...

அங்கே அந்தத் திருக்காட்சி வைபவம்...அந்தச் சந்நிதி யில் ஒவ்வொரு நாளும் அவள் தீட்சண்யமாக நின்று நடத்தும் அற்புதங்கள்.........

8

எண்ணத்தின் வடிவாகி எண்ணமும் தானுகி
எழுந்த நல் எழுச்சியாகி
மண்ணதன் விளைவாகி மண்ணுமே தானுகி
மலர்ந்த நல் மகிழ்ச்சியாகி
விண்ணதின் முகிலாகி விண்ணுமே தானுகி
விரிந்தநல் மழையுமாகி
பண்ணதின் சுவையாகி பண்ணுமே தானுகி
பரிந்த நல் இசையு மாகிக்
கண்ணதின் ஒளியாகிக் கண்ணுமே தானுகிக்
கண்முனே நடமாடு மயிலே
கடல் ஆடு சென்னையில் கவிபாடி நின்றிடும்
கருணைக் காமாட்சித்தாயே!

—மகான் துர்க்கைச் சித்தர் மலர்ந்தருளிய ஸ்ரீ காளிகாம்பாள் கவசம் எனும் ஸ்ரீ காமாட்சி சிந்தாமணி.

தன்னை உணர்ந்தவன் ஞானி.

தன்னையும், தன்னைச் சுற்றியுள்ள இயக்கங்களையும் உணர்ந்தவன் பரமஞானி.

உலகத்திலுள்ள நாம் எல்லோருமே ஞானிகளுமல்ல; பரமஞானிகளுமல்ல... அதனுல்தான் நம்மைச் சுற்றி நிகழ்ந்து கொண்டிருக்கும் பல அற்புதங்களுக்கு, தெய்விகத் திருவிளையாடல்களுக்கு விளக்கம் புரியாமல் குழம்பி நிற்கிறேம்.

அதாவது, விபரமறியாத சின்னஞ்சிறுகுழந்தை தன்னைச் சுற்றி நிகழும் செயல்களைப் பகுத்தறிய முடியாமல், பேதமையுடன் மலர மலர விழித்துக் கொண்டிருப்பதுபோல...

அப்படித்தான் ஒரு பரிபூரண விளக்கம் புரியாத புதிருடன் நான் விழித்தேன், அன்னை காளிகாம்பாள் சந்நிதி

யில், அறங்காவலர் திரு டி. வி. இராமமூர்த்தி கூறிய சில செய்திகளைக் கேள்விபட்டபோது...

திரு. ராமமூர்த்திக்குத் திருமணமாகி பன்னிரண்டு ஆண்டுகளாக மக்கட் பேறில்லை. தம்பதியர் வேதனையுடன் எத்தனையோ வைத்தியங்கள் செய்து பார்த்தனர். இராமேஸ்வரம் சென்று நாகபிரதிஷ்டையை வழிபட்டுப் பார்த்தார்கள். திருப்பதி வெங்கடாசலபதியையும் தரிசித்து தன் குறையை நீக்கி, மக்கள் பேறளிக்க பிரார்த்தித்து வந்தனர். ஆனாலும் எனனவோ, அவர்கள் குறை நீங்குவதற்கான அறிகுறி எதுவும் தென்படவில்லை.

இந்நிலையில் திரு. ராமமூர்த்தியின் தந்தை, அவருக்கு மறுவிவாகம் செய்து வைக்க ஏற்பாடுகள் செய்யத் துவங்கி விட்டார். அந்நிலையில்தான் காளிகாம்பாள் கோயில் சிவாச்சாரியார், திரு. ராமமூர்த்தியிடம், ''ஏன் கலங்குகிறீர்கள்? போட்ட இடத்தில்தான் தேட வேண்டும்? அம்பாளை நம்புங்கள், அவளை நம்பி ஒரு மண்டலம் பிரதட்சிணம் செய்யுங்கள். நிச்சயம் அவள் அருள் கிட்டும். உங்கள் குறையும் நீங்கும்'' என்றார்.

அதன்படி தம்பதியர் ஆலயத்தைப் பிரதட்சிணம் செய்யத் துவங்கினர். இத்தனைக்கும் திரு. ராமமூர்த்திக்கு பிரதட்சிணம் செய்ய முடியாத உடல் நிலை. அவர் மூல நோயால் பாதிக்கப் பட்டிருந்தாராம்.

இருப்பினும், உள்ளத்தில் அம்பாள் பெயரில் கொண்டிருந்த நம்பிக்கையும், பக்தியும் குன்றாமல் தம்பதியர் இருவரும் பிரதட்சிணம் செய்வார்கள். அவருடைய மனைவி தினம் நூற்றெட்டு பிரதட்சிணம் செய்வார். திரு. ராமமூர்த்தியால் அந்த அளவு பிரதட்சிணம் செய்ய முடியாது. ஒன்பது பிரதட்சிணம் மட்டுமே செய்துவிட்டு அம்பாளுக்கு எதிரே உட்கார்ந்து கொள்ளுவாராம்.

மார்கழி மாதம். மாதம் முழுவதும் விடியற்காலையிலேயே வழிபாட்டுக்கு வந்து, இவ்வாறு பிரார்த்தனைப்படி

பிரதட்சிணம் சுற்றி, ஆலயத்தில் பூஜை முடியும்வரை அமர்ந்திருந்து விட்டு செல்வார்களாம்.

அவர்களுடைய நம்பிக்கையும் பற்றும், அன்னையின் திருவுளத்தைக் கனியச் செய்தது போலும்! அவர்களுடைய வறண்ட வாழ்விலே வசந்தத்தை ஊற்றி விட்டாள் எம் அன்னை!

ஆம்! 1952ஆம் ஆண்டு அன்னையின் சந்நிதியில் அவ்வாறு கோரிக்கையுடன் வழிபட்டதின் பலன் கைமேல் கருணையாகக் கிட்டி, 1953 டிசம்பர் மாதம் அவருக்கு ஆண் குழந்தை பிறந்தது! தொடர்ந்து, 1956 ஆம் ஆண்டு ஒரு பெண் மகவும் பிறந்தது!

தத்துவங்கள் ஆயிரம் உண்டு. ஆனால். எம் அன்னை காளிகாம்பாள் சந்நிதியில் வெல்லும் ஒரே ஒரு தத்துவம் சரணாகதித் தத்துவம்தான்! கதி வேறு இல்லையென்று அவள் கழல் பற்றி தொழுது நின்றால், விழல் என்றோ, வீழல் என்றோ ஏதுமின்றி அருளின் சூழலாகவே நம்மை அரவணைத்து நிற்பாள் அந்த அம்பிகை.

அவளுடைய ஆலயத்தில் திருப்பணி நடந்து கொண்டிருக்கிறது! ஆனால் இந்த விநாடிவரை யாரிடமும் போய் திருப்பணிக்காக ஆலய அறங்காவலர்களோ, சிவாச்சாரியாரோ நிதி கேட்டதில்லையாம்.

தாயிடம், ''அம்மா, அந்த அறப்பணியை நிறைவேற்ற பொருள்திறன் எங்களிடம் இல்லை. நின் அருள்திறனால்தான் அது நிறைவேற வேண்டும்'' என்று அவளிடம் சரணடைந்தார்கள்.

அதன்பின் அத்தனை திருப்பணி வேலைகளும் பிரமிப்பூட்டும் வகையிலே இடையூறு நீங்கப்பெற்று நிறைவேறி வருகிறதாம்... அதையொட்டி நடந்த ஒரு சம்பவத்தை நினைவு கூறுகிறார், அறங்காவலர் திரு. டி. வி. ராமமூர்த்தி...

திருப்பணி தொடங்கிய புதிதில் பணப் பற்ருக்குறை மிக திட்சண்யமாகவே இருந்ததாம் வாரத்திற்கு ரூ 750 அல்லது ரூ. 800 கூலியாகக் கொடுக்க வேண்டி வருமாம். ஒரு வாரத்தில் சோதனை போல் பணம் இல்லாத நிலை ஏற்பட்டு விட்டது.

ஆலயத்திலிருந்த திருவேற்காடு தேவி உபாசகர் ஸ்வாமி இராமதாஸர் அவர்களும், குருக்கள் சாம்பமூர்த்தி சிவாச்சாரியாரும் என்ன செய்வது, எப்படிப் பணத்தைக் கூலியாட்களுக்குப் பட்டுவாடா செய்வது என்று தெரியாமல் குழம்பி, குமைந்து கொண்டிருந்தார்களாம்.

நேரம் ஆகிக் கொண்டே வந்தது. பணம் புரளும் மார்க்கம் தெரியவில்லை. வேலை செய்து வந்த கூலியாட்களோ, பணம் வராதோ என்ற அவநம்பிக்கையில், தம் இல்லாமையின் கோளாறினல் 'கசமுசா'வென்று பேச ஆரம்பித்து விட்டார்கள்.

நிலைமை இப்படி ஒரு நெருக்கடியான கட்டத்தை நெருங்கிக் கொண்டிருந்த போது, திடீரென்று டெலிபோன் மணி அடித்தது!

சிவாச்சாரியார் போனை எடுத்து யாரென்று விசாரித்தார்.

''தர்மகர்த்தாக்களோ, சிவாச்சாரியாரோ, யாராவது இருக்கிறார்களா...?'' என்று விசாரித்தது குரல்.

''எல்லோரும் இருக்கிறோம். கூடவே சுவாமி ராமதாஸரும்கூட இருக்கிறார். என்ன வேண்டும்?'' என்று கேட்டார் சிவாச்சாரியார்.

''திருப்பணிக்குப் பணம் கொடுக்க வேண்டும். ஒரு ஐந்து நிமிடம் காத்திருந்தீர்களானல் பணத்தோடு வருகிறோம்'' என்று போனில் யாரோ கூறினர்.

வியப்பும் மகிழ்ச்சியுமாக போனை வைத்து விட்டு காத்திருந்தார்கள் அனைவரும்.

ஐந்தே நிமிடத்தில் சைக்கிள் ரிக்ஷாவில் வந்து, ஆயிரத்தோரு ருபாய் ரொக்கமாக பணம் கொடுத்தார் வந்தவர். பரவசமுற்றிருந்த ஆலய நிர்வாகிகளும், சிவாச்சாரியாரும் பணத்தைப் பெற்றுக் கொண்டு ரசீது போடுவதற்காக, ''உங்கள் பெயரென்ன?'' என்று கேட்ட போது,

''என் பெயர் வேண்டாம். 'அம்பாள் குழந்தை' என்று போட்டுக் கொள்ளுங்கள்'' என்று கூறிவிட்டுச் சென்று விட்டார் அவர்!

அவரை அதற்குப்பின் ஆலயத்தில் யாரும் பார்க்கவில்லை. அவர் இன்னாரென்றும் அடையாளமும் தெரியவில்லை.

இப்படி மூன்று நெருக்கடியான சூழ்நிலையில் அம்பாளின் கருணை, முடக்கத்தையும்—தேக்கத்தையும் நீக்கி பிரச்சினைகளைத் தீர்த்து வைத்திருக்கின்றன.

அதேசமயம் இதே திருப்பணி விஷயமாக ஸ்தபதி திரு. சம்பந்தம் அவர்கள், சற்று அசாத்திய தன்னம்பிக்கையுடன் கூறிய ஒரு வார்த்தைக்கு ஒரு விசித்திரமான விளைவும் சம்பவித்தது.

9

அனைத்துள பொருளும் ஆவாய்
ஆவிக்கோர் முதலும் ஆவாய்
எனைத்துள உலகத் தெங்கும்
எவற்றுள இயக்கம் ஆவாய்
முனைத்திடும் அகந்தை தீர்ப்பாய்
முகிழ்த்திடும் அறிவும் சேர்ப்பாய்
நினைத்தினம் நினைவோம் தாயே!
நின்பதம் போற்றி! போற்றி!

—புலியூர்க்கேசிகன்

தற்பொழுது அன்னை காளிகாம்பாள் ஆலயத்தில் ராஜ கோபுரத் திருப்பணி வேலையைச் செய்து கொண்டிருப்பவர் தான் திரு. சம்பந்தம்.

அவர் இந்த வேலையைத் தொடங்குவதற்கு முன்பு அசாத்திய தன்னம்பிக்கையுடனும், தன்னால் எதையும் திட்டமிட்டு நிறைவேற்றிவிட முடியும் என்ற சுய கர்வத்து டனும், ''இந்த அம்பாளின் ராஜகோபுரப் பணியை நான்கு மாதங்களுக்குள் முடித்துக் கொடுத்து விடுகிறேன்'' என்று ஒரு சவாலாகவே கூறினாராம்...

அந்தப் பணியை உண்மையில் முடித்து வைப்பது யார்? அவரா, அம்பாளா...?

அதை ஒரு கணம் சிந்திக்கத் தவறிவிட்டார் அந்தத் திறமை வாய்ந்த ஸ்தபதி.

அவளுடைய ஆலயத்தின் பணியே ஆனாலும், அவளு டைய அருள் இல்லாமல் யாரால் என்ன செய்ய முடியும்...?

ஸ்தபதி அதை அப்போது உணராமல், தன் திட்டப்படி செயல்பட ஆரம்பித்தார். வேலை தடங்கலில்லாமல் நடை பெறுவதற்காக ஸ்தபதி சம்பந்தம், தன் சொந்த ஊரிலி ருந்தே சமையல் செய்து போடச் சிலரை அழைத்து வந்தி ருந்தார்...

வேலை தொடங்கி பதினைந்து நாட்கள் ஆகியிருக்கும் ஊரிலிருந்து வந்திருந்த வேலை ஆட்கள் அத்தனை பேருக்கும் ஜுரம் வந்து படுத்துவிட்டார்கள்! வேலையில் முடங்கல் ஏற் பட்டது. ஸ்தபதியார் திருஷ்டி கழித்துப் பார்த்தார். என் னென்னவோ உத்திகளையெல்லாம் கையாண்டு பார்த்தார். ஆனால் திருப்பணி வேலையோ முடங்கிவிட்டது...

கடைசியில்தான் ஸ்தபதிக்கு தன் தவறு நினைவுக்கு வந்தது. அன்னையின் சந்நிதியில் வைத்து, 'நான் நான்கு மாதத்தில்வேலையை முடித்துதருகிறேன்' என்றுசபதமிட்டுக்

தான் கூறியதற்குப் புத்தி புகட்டுவதற்காகத்தான், அம்மா இவ்வாறு தடங்கலை ஏற்படுத்தினாளோ என்று மெல்லத் தோன்றியது அவருக்கு.

மறுகணம், அம்பாளின் சந்நிதிக்குப் போய் தொழுது நின்று, ''தாயே, என் அகங்காரத்தால் என் சக்திக்கு மீறிய விஷயங்களைப் பேசிவிட்டேன். உன் திருவருளன்றி என்னால் எதைச் செய்ய முடியும் என்று உணராமல் பேசிவிட்டேன். என்னை மன்னித்து, என் பணியை நிறைவேற்று தாயே!'' என்று பிரார்த்தித்துக்கொண்டார்.

இரண்டே நாட்களில் நோயுற்ற வேலை ஆட்கள் எல்லாரும் படுக்கையிருலிந்து எழுந்து நலமுற்றனர். அதேபோல் வேலையில் ஏற்பட்ட சிற்சில தடங்கல்களும் அறவே நின்றன! ஆலய ராஜகோபுர பணியும் மளமளவென்று நிறைவேறத் தொடங்கியது.

இப்போது ஆலயத்தில் சுதை வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதைப்பற்றி யாராவது ஸ்தபதி சம்பந்தம் அவர்களிடம் குறிப்பிட்டு 'வேலை எப்போது முடியும்?' என்று கேட்டால்—

அவரிடமிருந்து பதில் இப்படி வருகிறது: ''என்னால் எப்படிச் சொல்ல முடியும்? அம்மா என்ன நினைத்திருக்கிறாளோ? என்னால் முடிந்த மட்டும் முயற்சிக்கிறேன். அவள் திருவுளம் கொண்டு நிச்சயிக்கிற நாளில் வேலை முடியும்!''

ஃ ஃ ஃ

10

உலகிலேயே மிகச் சிறந்த பாடம் எது?

அனுவபம்தான்.

அதுவும் நமக்கு ஏற்பட வேண்டும். பிறர்க்கு ஏற்பட்ட அனுபவங்களை நம்மால் அதே உணர்வுடன் ஏற்றுக்கொள்ளவோ அங்கிகரிக்கவோ முடியாது.

இப்படி ஓர் அவநம்பிக்கைக்கு உள்ளானுர் கும்ப கோணத்தைச் சேர்ந்த என் நண்பரான திரு சாமிநாதன்.

அன்னை காளிகாம்பாளின் மகிமையையும், இத்தலத்தில் அவளுடைய பக்தர்களுக்கு ஏற்பட்ட அபூர்வமான அனுப வங்களையும் அவர் தொடர்ந்து வாசித்து வந்தாலும், அவற்றை நம்பும் விஷயத்தில் அவருக்கு ஒரு குழப்பம் இருந்துகொண்டே இருந்ததாம்...அவற்றை அவரால் முழு மையாக நம்பவும் முடியவில்லையாம்...நம்பாமல் இருக்கவும் முடியவில்லையாம்...ஆதாரமில்லாமல் நான் தவருன தகவல் களைத் தரமாட்டேன் என்று அவருக்கு அழுத்தமான நம்பிக்கை இருந்தாலும், கட்டுரைகளில் வெளியாகும் செய்திகள் அவருடைய தர்க்கவாத சிந்தனைக்கு அப்பாற் பட்ட விஷயங்களாகவே தோன்றினவாம்...

இதைப்பற்றி ஆலவத்திலுள்ள சிவாச்சாரியார் அவர் களிடம் குறிப்பிட்டு, ''இப்படியெல்லாம் உண்மையிலேயே நடந்திருக்கிறதா? அவர் எழுதியதெல்லாம் உண்மை தானு?'' என்று கேட்டாராம்.

சிவர்ச்சாரியார் சாம்பமூர்த்தி குருக்கள் மிக உறுதி யுடன், ''ஒன்றுகூட பிசகு இல்லாமல் அத்தனையும் இத்தலத் தில் நடந்தவைதான். அம்பாள் மிகவும் சக்தியுடைவள்'' என்று கூறிக் கொண்டிருக்கும்போதே, அங்கே திரு சாமி நாதனை வியப்பிலும் திகைப்பிலும் ஆழ்த்தும் வண்ணம் ஒரு சம்பவம் நிகழ்ந்தது!

அவரும் சிவாச்சாரியாரும் பேசிக் கொண்டிருந்த வடக்குப் பிரகாரத்தின் கிழக்கு மூலை அருகே, திடீரென்று ஒரு பகுதியைச் சுட்டிக்காட்டி சிவாச்சாரியார், ''அதோ பாருங்கள், அம்பாளுடைய அற்புதத்தைப் பற்றி நீங்கள் சந்தேகப்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள்...ஆனுல் எல்லாவற் றையும் கேட்டுக்கொண்டு, இதோ இங்கே அவள் சிரித்துக் கொண்டிருக்கிருள்!'' என்ருர்.

அவர் காட்டிய திசையைப் பார்த்த சாமிநாதனுக்கு அந்தக் கணமே உடம்பெல்லாம் புல்லரித்து வியர்த்தது...

காரணம், அங்கே ஒரு சுமங்கலியான வயதான அம்மாள், நெற்றியில் பெரிதாகப் பரந்த குங்குமம் அணிந்த வாறு, புன்னகை தவழும் முகத்தோடு அங்கு படுத்திருந் தார். சற்று விநாடி முன்புவரைகூட அங்கு அவரைக் காண வில்லை. சாமிநாதன் பார்த்துக்கொண்டே இருக்கும்போது அப்பெண்மணி எழுந்து அங்கிருந்து நகர்ந்து செல்வதுபோல் இருந்தது. பளிச்சென்று கண் காணுமல் மறைந்துவிட்டார்!

அப்படித் திடீரென்று தன்முன் தோன்றி பிரத்யட்ச மாக தான் பார்த்துக் கொண்டிருக்கும்போதே மறைந்தவர் அம்பாளைத் தவிர வேறு யாருமே இல்லை என்று உணர்ந் ததும் சாமிநாதன் மெய் சிலிர்த்துப் போனுர். அந்த அனுப வத்தைப் பெற்ற உணர்வுக் கிளர்ச்சியோடு என்னிடம் வந்து சொல்லி தன் மனவெழுச்சியை பகிர்ந்துகொண் டார். அவரை அன்று சந்தித்ததுபோல் பதட்டமான ஒரு பரவச மிக்க நிலையில் வேறு என்றும் நான் சந்தித்ததே இல்லை. அம்பாளின் தரிசனம்தான் அவரை அவ்வாறு உணர்ச்சிவசப்படுத்தியிருந்தது. வெளிப்படையாக அம்பா ளின் செயலை நம்பாததைப் போலப் பேசினுலும் தன் வாழ் விலும் அவள் இப்படி ஓர் அற்புதத்தை நிகழ்த்த மாட் டாளா என்ற ஆதங்கம் அவ்வளவு தாபமாக அவர் மனத் துள் கனன்று கொண்டிருக்கிறது. அந்தத் தாபத்தைத்தான் அம்பாள் அப்படித் தீர்த்து வைத்திருக்கிருளோ? யாரறி வார்...!

இப்படி எத்தனை எத்தனை அற்புதங்கள் என் அன்னையின் சந்நிதியில் அத்தனைக்கும் நாயகமாய், அருள்வடிவாய் ஜொலித்து நிற்கிருள் அம்மா காளிகாம்பாள்.

மேற்கு நோக்கியிருக்கும் அவளுடைய சந்நிதியைத் தொழுது நிற்கிறேன்.

மேற்கு நோக்கி எந்த மூர்த்தி எழுந்தருளியிருந்தாலும் விசேட அருள் வழங்கும் சக்திப் பெருக்கு உண்டு என்பர்.

இங்கு மேற்கு நோக்கி எழுந்தருளியிருக்கும் பெருமையால் மட்டுமல்லாது, கருவறையில் அமைந்திருக்கும் ஸ்ரீசக்கர மகிமையாலும் அம்பாள் இங்கு அபூர்வ சக்திப் பெருக்குடன் திகழ்கிருள்.

'யார் அந்த ஸ்ரீசக்கரத்தை அமைத்தார்கள் என்று தெரியவில்லை. ஆயினும் யாரோ ஓர் அபூர்வ மகான்தான் அதை அமைந்திருக்க வேண்டும்'' என்கிருர் சிவாச்சாரியார்.

அவள் தேஜசில் மனதைப் பறிகொடுத்து நிற்கிறேன். அமர்ந்த திருக்கோலத்தில் அன்னை அருள் சொரிந்து பிரகாசிக்கிருள்! வலது மேற்கரத்தில் அங்குசம்-வலது கீழ்க்கரத்தில் தாமரைப் பூ-இடது மேற்கரத்தில் பாசம், இடது கீழ்க்கரத்தில் வரத ஹஸ்தம் துலங்குகின்றன. இடது காலை மடக்கி, வலது காலைத் தொங்கவிட்டு, தாமரை மலர்மீது அது படியும்படி அமர்ந்திருக்கிருள் அம்மா. அவளடியில் பிரம்மா-விஷ்ணு-ருத்திரன் மூவரும் அமைந்துள்ளனர்... மூன்று லோகத்துக்கும்-மும்மூர்த்திகளின் முத்தொழிலுக்கும் மூலமாய் நின்ற அந்த முழுமுதல் மகாதேவியை வந்தித்து, அவள் சக்திப் பிரகாசத்தில் கரைந்து நிற்கிறேன்.

பிறப்பறுக்கும் பேரொளியாய்-இரப்பார்க்கு எல்லாமாய்—வல்லமைக்கு வளச்செருக்காய்-வாழ்விக்கும் ஒளி விளக்காய், ஆசைப் பிணி அகற்றும் அகண்ட மாஜோதியாய் ...ஜோதிக்குள் சுடரொளியாய்... சொல்லரிய ஞானமாய் எழுந்து நிற்கிருள் என் அம்மா...

எங்கெங்கிருந்தோ ஏழை மக்கள் கோடியாய், இல்லாமைச் சுமைதூக்கிகளாய் அவள் சந்நிதியில் தொழுது நிற்கிறோம்...ஏந்திய கரத்துக்கு சாந்தி தரும் நாயகமாய் அதோ என் அம்மா புன்னகைக்கும் ஒளி காணீரோ...

அவள் சந்நிதியில் ஏற்றப்படும் கற்பூர ஆராதனையில் அவள் சீரடி அசைவைக் காணீரோ!

அவள் சந்நிதியில் ஒலிக்கும் வேத கோஷங்களில்—பாமாலைகளில்—வழிபாட்டுக் கீர்த்தனை ஒலிகளில் அவள் நாத சொருபமாய் நர்த்தனமாடுவதைக் காணீரோ...

அனைத்துக்கும் மேலாக என் அம்மா அழுத கண்களிலும் தொழுத கரத்திலும் ஜோதி முகம்காட்டி சுடர்விடும் கருணையால் சுகமளிக்கும் அந்தக் கருணை காணீர், காணீரோ! அவள் கருணைப் பதம் கிட்டியபின் இந்த காசினியில் நமக்கு இனி வேண்டுவது என்ன?

கல்யாண வ்ருஷ்டி ஸ்தோத்திரம்

(ஸ்ரீ ஜகத்குரு ஆதி சங்கரரால் இயற்றப்பட்ட இந்த ஸ்லோகத்தைப் படித்தால் ஸ்ரீ வித்யா மந்திரத்தை ஜபித்த பலன் உண்டு. ஸ்ரீவித்யா மந்திரத்தின் ஆரம்ப எழுத்தான க-முதல் ஒவ்வொரு எழுத்தும் இந்த ஸ்தோத்திரத்திலுள்ள ஒவ்வொரு சுலோகத்தின் ஆரம்ப எழுத்தாக வரிசையாக வருகிறது. ஸ்ரீவித்யா மந்திரத்தில் ஹ்ரீம் என்ற சொல் ஐந்தாவது, பதினோராவது, பதினைந்தாவது அட்சரமாக வருவதைப் போலவே இதிலும் அமைந்திருக்கிறது. அப்படிப் பட்ட சக்தி வாய்ந்த இந்த ஸ்லோகத்தைப் படித்தால் எல்லாத் துன்பங்களும் நிவர்த்தியாகும். கல்வியும், செல்வமும், ஆரோக்கியத்தோடு கூடிய நீண்ட ஆயுளும், உத்யோக, வியாபார லாபங்களும், பதவியும் சௌபாக்கியமும் பெறலாம்.)

1. கல்யாண வ்ருஷ்டி ப்ரிவாம் ருதபூரிதாபி
   லக்ஷ்மீஸ்வயம்வரண மங்கள தீபிகாபி:
   ஸேவாபிரம்ப தவ பாத ஸரோஜமூலே
   நாகாரி கிம் மனஸி பாக்யவதாம் ஜனனும் ||

(அம்மா! மஹாலட்சுமி! மங்கள விளக்குகளை நெஞ்சிலே ஏற்றி, சந்தோஷங்களை மழையாகக் கொட்ட வேண்டி உன் திருவடிகளில் பணிந்து முத்தான வார்த்தை அணிகளால் உனக்கு அர்ச்சனை செய்ய வந்திருக்கிறேன். உன்னை பூஜிக்கும் எண்ணத்தைப் பெற்றவர்கள் புண்ணியசாலிகள்! நான் கேட்டு நீ இல்லையென்று சொல்லி விடுவாய்!)

ஃ ஃ ஃ

2. ஏதாவ தேவ ஜனனீ ஸ்புருஹணீய மாஸ்தே
   த்வத்வந்தனேஷு ஸலிலஸ்த்தகிதே சநேத்ரே |
   ஸான்னித்யமுத்யதருணயுத ஸோதரஸ்ய
   த்வத் விக்ரஹஸ்ய பரயா ஸுதயா ஸ்புலுதஸ்ய ||

(ஜனன மரணமற்ற மகாதேவி! அமிருதத்தைக் குடித்தது போன்ற குளிர்ச்சியும், நிறைவும், அதே சமயம் பதினாயிரம் சூரியப்பிரகாசம் போன்ற பிரகாசமும் கொண்ட உன் வடிவத்தை கண்ணார நான் காண வேண்டும். கண்ட பின் சர்வாங்கமும் பூமியில் பட நான் நமஸ்கரிக்கும் போது கண்களில் பக்தி 'இன்னும் இன்னும்' என்று பேராசை தோன்ற வேண்டும்.)

ஃ ஃ ஃ

3. ஈசத்வ நாம கலுஷா: கதி வா ந ஸந்தி
ப்ரஹ்மாதய: ப்ரதிபவம் ப்ரளயாபிபூதா: |
ஏக: ஸ ஏவ ஜனனி ஸ்த்திரஸித்தி ராஸ்தே
ய: பாதயோஸ்தவ ஸக்ருத் ப்ரணதிம் கரோதி ||

(படைப்புக் கடவுள் என்றும், தேவலோகை ஆளுகிறோம் என்றும் கர்வம் கொண்டுள்ளவர்கள் யுகம் முடியும் போது அழிகிறார்கள்! தயாபரி! எந்தப் பிரளய காலத்திலும் நீ அழிவதில்லை! அண்ட சராசரங்களையும் காப்பவளே! உன்னை வணங்குகின்றவர்களுக்கு நீரிலும், நெருப்பிலும்கூட ஆபத்து அணுகுவதில்லை.)

ஃ ஃ ஃ

4. லப்த்வா ஸக்ருத் த்ரிபுர சுந்தரி தாவகீனம்
காருண்ய கந்தலித காந்திபரம் கடாட்சம் |
கந்தர்ப்ப கோடி ஸுபகாஸ்த்வயி பக்திபாஜ:
ஸம்மோஹயந்தி தருணீர் புவனத்ரயே அபி ||

(திரிபுர சுந்தரி! கருணையும், அழகும் பொருந்திய உன் கடைக்கண் பார்வை பட்டவர்கள், உன்னிடம் பக்தி கொண்டு நீயே சர்வமும் என்று தஞ்சமடைந்தவர்கள் கோடி மன்மத அழகைப் பெற்று விடுகின்றனர். அழகிய யுவதிகளெல்லாம் அவனை மணக்க போட்டியிடுகின்றனர்.)

ஃ ஃ ஃ

5. ஹ்ரீங்காரமேவ தவ நாம க்ருணந்தி வேதா
மாதஸ்த்ரிகோண நிலயே திரிபுரே த்ரிநேத்ரே |
த்வத்ஸம்ஸம்ருதௌ யமபடாபிபவம் விஹாய
திவ்யந்தி நந்தனவனே ஸஹலோக பாலை: ||

(ஸ்ரீ சக்ரத்தில் வசிப்பவளே! திரிபுரே! மூன்று கண்களை உடையவளே! வேதங்களால் உன்னை ஸ்தோத்தரிக்க ஹ்ரீம் என்ற வார்த்தையே பயன்படுகிறது. தேவி! உன்னை நினைத்த மாத்திரத்திலேயே யம கிங்கரர்கள் அஞ்சுகிறார்களாமே!)

6. ஹந்து: புராமதிகலம் பரிபீயமான:
க்ரூர: கதம் ந பவிதா கரளஸ்யவேக: |
நாஸ்வாஸனாய யதி மாதரிதம் தவார்த்தம்
தேவஸ்ய ஸஸ்வதம்ருதாப்லுத சீதலஸ்ய ||

(உமா மகேஸ்வரி! தேவர்களும், அசுரர்களும் க்ஷீராப்தியைக் கடையும்போது தோன்றிய நஞ்சை மகா தேவன் சாப்பிட்டார். அது அவர் தொண்டைக்குக் கீழே இறங்காததன் காரணம் என்ன? பாதி சரீரம் என் அம்பிகை யுடையது. அர்த்த நாரீஸ்வரியாகத் தாங்கள் இல்லாவிடில் பரமசிவன் என்னவாகி இருப்பாரோ?)

7. ஸர்வஜ்ஞதாம் ஸதஸி வாக்படுதாம் ப்ரஸூதே
தேவி த்வதங்கரி ஸரஸீருஹயோ: ப்ரணாம: |
கிம்ச ஸ்புரன் முகுடஜ்வல மாதபத்ரம்
த்வே சாமரே ச மஹதீம் வஸூதாம் ததாதி ||

(அம்பிகே! உன்னை ஒரு முறை நமஸ்கரித்து விட்டால் பாவமெல்லாம் பொசுங்கி விடுகிறது. உன்னை எண்ணி ஆனந்தக் கண்ணீர் பெருக்குபவன் நாவில் நீ இருந்து பெருங் கூட்டத்திலும் பிரமிக்க வைக்கும் பேச்சாற்றலைக் கொடுக் கிறாய்! பதவியை விரும்புகின்றவனுக்கு சிரஸிலிருந்து ஒளி தருகின்றாய்! பூமியை விருப்புகின்றவனுக்கு உனது சிம்மா சனத்திலிருந்து ஒளி கிடைக்கின்றது.)

8. கல்பத்ருமை நபி மதப்ரதிபாதனேஷு
காருண்யவாரிதி பிரம்ப பவத்கடாக்ஷை: |
ஆலோகய த்ரிபுர ஸுந்தரி, மாமனாதம்
த்வய்யேவ பக்தி பரிதம் த்வயி பத்தத்ருஷ்ணம் ||

(தாயே! உன்னையே தஞ்சமென்று அடைந்த இந்த பக்தையைப் பார்! உன்னை விட்டால் எனக்கு ஆதரவில்லை! நீயே உறவு எனக்கு! கருணைக் கடல் கற்பகத்தரு, காமதேனு என்றெல்லாம் எத்தனை பேர் உன்னைப் புகழ்கிறார்கள்! எனக்கும் கொஞ்சம் அருள் பாலித்தால் குறைந்தா போய் விடும்!)

9. ஹந்தேதிரேஷ்வபி மனாம்ஸி நிதாய வான்யே
பக்திம் வஹந்தி கில பாமர தைவ தேஷு |
த்லமேவ தேவி மனஸா ஸமனுஸ்மராமி
த்வமேவ நௌமி சரணம் ஜனனி த்வமேவ ||

(அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகி! ஆதிபராசக்தி! அல்ப பலன்களை வேண்டி மற்றவர்களைப் போல பிற தெய்வங்களை நான் துதிப்பதில்லை. உங்களையே சரணடைந்து விட்டேன். எப்போதும் உங்களையே நினைத்துக் கொண்டிருக்கும் பக்தன் துன்பப்பட்டால் அது உங்களுக்கு அவமானமில்லையா?)

10. லக்ஷ்யேஷு ஸத்ஸ்வபி கடாட்ச நிரீக்ஷணானா—
மாலோகய திரிபுரசுந்தரி மாம் கதாசித் |
நூனம் மயா து ஸத்ருஸ: கருணைக பாத்ரம்
ஜாதோஜனிஷ்யதி ஜனோ ந ச ஜாயதேவா ||

(திரிபுரசுந்தரி! உலகத்தில் உன் அருள்பெற்றோர் எத்தனையோ ஆயிரம்! ஐசுவரியத்தால், படிப்பால், வித்தையால், திறமையால், பலத்தால் இப்படிப் பலரிடம் பலவிதமாக கடாட்சித்திருக்கிறாய்! ஒரு சிலருக்கு இரண்டொன்றுசேர்ந்தே கிடைத்திருக்கிறது. ஆனால் எனக்கு ஒரு பாக்கியமும் இல்லை! ஒப்பாரும் மிக்காரும் இல்லை என்னும்படி போகங்களைக் கொடுக்கவேண்டியது உன் கடமை அல்லவா?)

11. ஹ்ரீம் ஹ்ரீமிதி ப்ரதிதினம் ஜபதாம் தவாக்யாம்
கிம் நாம துர்லபமிஹ த்ரிபுராதி வாஸே |
மாலாகிரீடமத வாரண மானனீயா
தான்ஸேவதே வசுமதீ ஸ்வயமேவ லக்ஷ்மீ ||

(விழித்திருக்கச் செய்பவளும் நீதான்! கனவில் சஞ்சரிக்கச் செய்பவளும் நீதான்! அமைதியான சொப்பனமில்லாத நித்திரையைத் தருபவளும் நீதான்! வேதங்கள் சொல்லும் ஹ்ரீம், ஹ்ரீம் என்ற உன் நாமாவைத் தினமும் ஜபிப்பவர்களுக்கு எதுதான் கிடைக்காது? வைகுண்டத்தையும், விஷ்ணுவின் மார்பையும் விட்டு இந்த சப்தம் கேட்கும் இடத்திற்கு மஹாலட்சுமி விரைந்து வருகின்ருள்.

12. ஸம்பத்கராணி ஸகலேந்த்ரிய நந்தனுனி
ஸாம்ராஜ்ய தானிநிரதானி ஸரோருஹாக்ஷி
த்வத் வந்தனுனி துரிதா ஹரணோத்யதானி
மாமேவ மாதரநிஸம் கலயந்து நான்யம் ||

(செந்தாமரை போன்ற விழிகளை உடையவளே! எல்லா பாக்கியங்களையுங் கொடுப்பவளே! எல்லா உறுப்புகளுக்கும் மகிழ்ச்சியைத் தருபவளே! பாபங்களைத் தொலைப்பவளே! ராஜ்யத்தையே தரும் அதிகாரம் உனக்கு உண்டு. ராஜ ராஜேஸ்வரிக்குச் செய்யும் நமஸ்காரங்களுக்கு இத்தனை சக்தி உண்டு. எனக்குள் உன்னை அடக்கமாக்கிக் கொண்டேன், இனி என்னை விட்டு நீ போகக் கூடாது.)

13. கல்போபஸம் ஹ்ருதிஷு கல்பிததாண்டவஸ்ய
தேவஸ்ய கண்ட பரஸோ! பரபைரவஸ்ய |
பாசாங்குஸை க்ஷுவஸராஸன புஷ்பபாணு
ஸாஸாக்ஷிணி விஜயதே தவமூர்த்திரேகா ||

(ஊழிக் காலத்தில் நடனமாடுகிருர் ருத்ரன்; அழிக்கும் தொழிலுக்கு கோடரியைத் தரித்திருக்கும் போது சங்கரன். அந்தக் கால சம்ஹார மூர்த்தைக்கு பாசம், அங்குசம், கரும்புவில், புஷ்பபாணம் இவற்றைத் தரித்திருக்கும் தங்களையன்றி வேறெவர் இணையாக முடியும்?)

14. லக்ஷ்மீம் ஸதா பவது மாநரிதம் தவார்த்தம்
தேஜ: பரம் பஹுள குங்கும பங்கஸோணம் |
பாஸ்வத் கிரீடமம் ருதாம் ஸுகலா வதம்ஸம்
மத்யே த்ரிகோண நிலயம் பரமாம்ருதார்த்ரம் ||

(லோக நாயகி! கண்களைக் கூசவைக்கும் ஒளி! வாசனைப் பூக்களான சண்பகம், மகிழம்பூ, ஜாதிப்பூ இவைகளாலும், குங்கும அர்ச்சனைகளாலும் சிவந்திருக்கும் கிரீடம்! சந்திரப் பிரபையோடு கூடிய அமிருத வாஹினி என் ஹிருதயத்தை விட்டுப் போகாதே, அம்மா!)

15. ஹ்ரீங்காரமேவ தவ நாம ததேவ ரூபம்
த்வந்நாம துர்லபமிஹ த்ரிபுரே க்ருணந்தி |
த்வத் தேஜஸா பரிணதம் வியதாதிபூதம்
ஸௌக்யம் தனோதி ஸரஸீருஹ ஸம்பவாதே ||

(ஹ்ரீம் என்ற சொல்லே பெயராகவும், வடிவமாகவும் உடைய மகாசக்தி! உன் அருள் கடாட்சத்தினுல் ஏற்பட்டதே பூமியும், வானமும், காற்றும், மழையும், படைப்பும், அழிவும்! பிரும்மா, வருணன், வாயு, அக்னி போன்ற முதலிய தேவர்கள் உன்னுலன்றோ இயங்கு கின்றனர்!)

16. ஹ்ரீங்காரத்ரயஸம்புடேன மஹதா மந்த்ரேண ஸந்தீபிதம்
ஸ்தோத்ரம்ய: ப்ரதி வாஸரம் தவபுரோ மாதர்ஜபேன் மந்த்ரவித் |
தஸ்யக்ஷோணிபுஜோ பவந்தி வஸகாலக்ஷ்மீஸ்ரஸ்தாயினீ
வாணிநிர்மல ஸுக்திபாரபரிதக ஜாகர்தி தீர்க்கம்வய: ||

(தினமும் பயபக்தியுடன் ஒருமனதாக இதைப் படிக்கின்றவர்களுக்கு அரசனும் அடிமையாகிருன். மஹாலக்ஷ்மி அவனை விட்டுப் போவதில்லை. சரஸ்வதி பரிசுத்தமான, சுபத்தைத் தரக்கூடிய சொற்களை அவனுக்கு வழங்குகிருள். கௌரி அவனுக்கு திட உடலோடு தீர்க்காயுளைத் தருகிருள்.)

கல்யாண வ்ருஷ்டி ஸ்தோத்திரம் முற்றிற்று.

ஃ ஃ ஃ

குலம் விளங்க வம்சகவசம்

(குறைப்பிரசவமாகும் பெண்கள் இதை ஜபிப்பதால் குழந்தை பூரண வளர்ச்சி பெற்று திடகாத்திரமாகப் பிறக்கும். தீர்க்காயுளோடு இருக்கும். ருதுவாகாத பெண்கள் ருதுவாவார்கள். பெண் குழந்தைகளையே பெறுபவர்களுக்கு ஆண் மகவு பிறக்கும். மலட்டுப் பெண்களுக்கும் புத்திர பாக்கியம் கிடைக்கும். மாலையில் விளக்கேற்றி வைத்துக் கொண்டு ஒரு பாத்திரத்தில் சுத்தமான ஜலத்துடன் இதை ஜபிக்க வேண்டும். ஜபம் முடிந்தவுடன் தண்ணீரைச் சாப்பிட்டு விடவேண்டும். அடிக்கடி அபார்ஷன் ஆகிறவர்கள் எத்தனை முறை கர்ப்பச் சிதைவு ஏற்பட்டதோ அத்தனை முறை சொல்ல வேண்டும். தீய மக்களை உடையவர்களுக்கும் இதைப் படிப்பதால் சத் புத்திரர்கள் தோன்றுவர்.

1. ஸ்ரீ கணேசாய நம:
பகவன் தேவதேவேச க்ருபயா த்வம் ஜகத் ப்ரபோ |
வம்சாக்ய கவசம் ப்ருஹி மஹ்யம் ஸிஷ்யாய தேனக ||
யஸ்ய ப்ரபாவாத்தேவேஸ வம்ஸ வ்ருத்திர்ஹி
ஜாயதே ||

(தேவர்களுக்கெல்லாம் தேவனே! குற்றமற்றவனே | உலகத்துக்குப் பிரபுவான ஹே பகவானே, நீ மனமிரங்கி சீடனான எனக்கு வம்சம் விருத்தியாகும் வழியைக் கூற வேண்டும்.)

2. ஸுரிய உலாச :
ஸ்ருணு புத்ர ப்ரவக்ஷ்யாமி
வம்சாக்யம் கவசம் சுபம் |
சந்தான வ்ருத்திர் யத்பாடாத்
கர்ப்பரக்ஷா ஸவிந்ருணும் ||

(இது மங்களமான வம்சத்தை விருத்தி செய்யும் வம்சு கவசம். இதைப் படித்தால் நல்ல மகன் பிறப்பான். கர்ப்பம் காப்பாற்றப்படும்.)

3. வந்த்யாபி லபதே புத்ரம்
காகவந்தயா ஸுதைர்யுதா |
ம்ருதவத்ஸா ஸபுத்ராஸ்யாத்
ஸ்ரவத்கர்ப்பா ஸ்திரப்ரஜா ||

(இந்த ஸ்லோகத்தைச் சொன்னல் மலட்டுப் பெண் மணிகளுக்கும் மழலைபாக்கியம் கிடைக்கும். அலிக் குழந்தைகள் பிறக்காது. கர்ப்பச்சிதைவு ஏற்படாது. பிறக்கும் போது குழந்தை இறக்காது.)

4. அபுஷ்பா புஷ்பிணீ யஸ்ய
தாரணுச்ச ஸுகப்ரஸு : |
கன்யாப்ரஜா புத்ரிணீஸ்யா
தேதத் ஸ்தோத்ர ப்ரபாவத ||

(புஷ்பவதியாகாத பெண்கள் புஷ்பவதியாவார்கள். சுகப்பிரசவம் ஏற்படும். பெண் குழந்தைகளையே பெறுபவர் களுக்கு ஆண்குழந்தைகளும் பிறக்கும்.

5. பூதப்ரேதாதிஜா பாதா யா பாதா குலதோஷஜா |
க்ரஹ பாதா தேவ பாதா ஸத்ருக்ருதா சயா ||

6. பஸ்மீபவந்தி ஸர்வா ஸ்தா : கவசஸ்ய ப்ரபாவத |
ஸர் வே ரோகா விநஸ்யந்தி ஸர்வே பாலா
க்ரஹாஸ்சயே ||

(பூதபைசாசங்கள் கர்ப்பிணியைத் தொடுவதில்லை. பிணவாடை தட்டாது. முன்னோர்கள் செய்த தோஷங்கள் நீங்கி விடுகின்றது. வீட்டிலே ஏவப்படுய் பில்லி சூன்யங்களும் விட்டு விலகுகின்றன. நீர், நெருப்பு, தேவதைகளாலும் துன்பம் நேர்வதில்லை. எதிரிகளால் வைக்கப்படும் மாந்திரீகம் திருப்பி அவர்களையே தாக்குகின்றன. அம்மை போன்ற நோய்களும் அண்டுவதில்லை. குட்டிப் பேய்களைக் கொல்லக்கூடிய வலிமை பெற்ற கவசம் இது.)

7. பூர்வே ரக்ஷது வாராஹி சாக்னேய்யா மம்பிகா
ஸ்வயம் |
தக்ஷிணே சண்டிகா ரக்ஷேந்-நைர்ருத்யாம்
ஸவவாஹினி ||

8. வாராஹி பஸ்சிமே ரக்ஷேத் வாயவ்யாம் சமஹேஸ்வரீ |
உத்தரே வைஷ்ண ரக்ஷே தீ ஸானே ஸிம்ஹ
வாஹினி ||

(கிழக்கு திசையில் வாராஹியும், தென்கிழக்கு திசையில் அம்பிகையும், தெற்கில் சாமுண்டியும், தென்மேற்கில் காளிகாம்பாளும், மேற்கில் வாராஹியும், வடமேற்கு திசையில் மஹேஸ்வரியும், வடக்கில் வைஷ்ணவியும், வடகிழக்கில் சிம்மவாகனேஸ்வரியுமாக இருந்து பராசக்தி கர்ப்பத்தைக் காக்கிறாள்.)

9

. ஊர்த்வம்து சாரதா ரக்ஷேதஹோ ரக்ஷது பார்வதீ!
ஸாகம்பரீ ஸிரோ ரக்ஷேன் முகம் ரக்ஷது பைரவி ||

(ஆகாயத்தில் சாரதாம்பாளாக, பாதாளத்தில் பார்வதியாக, தலையை சாகம்பரியாக, முகத்தை பைரவியாக காக்கிறாள் அன்னை.)

10. கண்டம் ரக்ஷது சாமுண்டா ஹ்ருதயம்
ரக்ஷதாச்சிவா |
ஈசானிச புஜௌ ரக்ஷேத்குக்ஷிம் நாபிம் சகாலிகா ||

(கழுத்தை சண்டிகையாக, இருதயத்தை சிவகாமியாக, தோள்களை பவானியாக, மார்பை மீனாட்சியாக, நாடியை நகுலேஸ்வரியாக அன்னை காப்பாற்றுகிறாள்.)

11. அபர்ணாஹ்யுதாம் ரக்ஷேத்கடிம் பஸ்திம் ஸிவப்ரியா |
ஊரு ரக்ஷது கௌமாரி ஜயா ஜானுத்வயம் ததா ||

(வயிற்றை அபர்ணையும், இடுப்பை காமேஸ்வரியும், மூத்திரப்பைகளை மூகாம்பிகையும், துடைகளை கௌமாரியும் இரண்டு முழங்கால்களையும் ஜயையுமாக மகாசக்தி காக்கின்றாள்.)

12. குல்பௌ பாதௌ ஸதா ரக்ஷேத் ப்ரஹ்மாணீ
பரமேஸ்வரீ |
ஸர்வாங்கானி ஸதா ரக்ஷேத் துர்கா துர்கார்த்தி
நாஸினீ ||

(கணுக்கால்களை கலியாணியும், பாதங்களை பிரம்மாணியும், உடல் முழுவதையும் துக்கம் போக்கும் துர்காதேவியும் என்றும் எந்த நேரமும் காப்பாற்ற வேண்டும்.)

13. நமோ தேவ்யை மஹா தேவ்யை
துர்காயை ஸததம் நம :
புத்ர ஸௌக்யம் தேஹி தேஹி
கர்ப்ப ரக்ஷாம் குருஷ்வ ந : ||

(துன்பம் துடைக்கும் துர்க்கையம்மாவை நமஸ்கரிக்கின்றேன். என் கர்ப்பத்தை முழுமையடையச் செய். என் பிள்ளையைக் காப்பாற்று. சத்புத்திரனைக் கொடு.)

14. ஓம் ஹ்ரீம் ஹ்ரீம் ஹ்ரீம் ஸ்ரீம் ஸ்ரீம் ஸ்ரீம்
ஐம் ஐம் ஐம் மஹா காளீ மஹாலஷ்மீ
மஹா சரஸ்வதி ரூபாயை நவகோடி
மூர்த்யை துர்காயை நம : |

(காளியாயும், லஷ்மியாயும், சரஸ்வதியாயும், ஒன்பது கோடி மூர்த்தியாயும் விளங்கும் துர்க்காதேவியின் பாதம் பணிகின்றேன்.)

15. ஹ்ரீம் ஹ்ரீம் ஹ்ரீம் துர்க்கார்த்தி நாஸினி
ஸந்தான ஸௌக்யம் தேஹி தேஹி
வந்த்யத்வம் ம்ருதவத் ஸத்வம் ச ஹர ஹர
கர்ப்பரக்ஷாம் குரு குரு ஸகலாம் பாதாம்
குலஜாம் பாஹ்யஜாம் க்ருதாம க்ருதாம்ச
நாஸய நாஸய ஸர்வகாத்ராணி ரக்ஷ ரக்ஷ
கர்ப்பம் போஷய போஷய ஸர்வோ பத்ரவம்
சோஷய சோஷய ஸ்வாஹா ||

16. அனேன கவசேனுங்கம் ஸப்தவாராபி மந்த்ரிதம் |
ருதுஸ்நாதா ஜலம் பீத்வா பவேத் கர்ப்பவதீ த்ருவம் ||

(கடும் பீடையைப் போக்கும் பராசக்தி! புத்திர பாக்கியத்தைத் தருவாயம்மா! மலடி என்ற பழிச் சொல்லிலிருந்து காப்பாற்று! பெற்றுப் பறிகொடுக்கும் பாவியாக நிற்கின்றேன்! குலதோஷமோ? பூர்வ ஜென்ம வினையோ? பிறரால் ஏவப்பட்ட பில்லி சூனியமோ எதுவாயிருந்தாலும் அழித்துவிடு அம்மா! வலி பொறுக்க முடியவில்லை— வலியை நிறுத்து...என் சரீரத்திற்கு நீயே காவல்.)

(வீட்டு விலக்கிருந்து குளித்த மறுதினம் இதை ஜபிக்க வேண்டும். 'சாகம்பரி சிரோ ரக்ஷேன்' என்று சொல்லும் போது எதிரிலுள்ள தீர்த்தத்தை ஒரு விரலால் தொட்டு தலையைத் தொடவேண்டும். இப்படியே எல்லா அங்கங்களை

யும் தொட்டுக் கொள்ள ஜபிக்கும் பெண் கோரியது நடக்கும்.)

17. கர்ப்ப பாத பயே பீத்வா த்ருடகர்ப்பா ப்ரஜாயதே |
அனேன கவசேனுத மார்ஜிதாய நிஸாகமே ||

(கர்ப்பம் கலைந்து விடும் என்ற சந்தேகம் எழும்போது ஜபித்த ஜலத்தில் கொஞ்சம் அருந்தினுல் உபாதை இருக்காது.)

18. ஸர்வ பாதா வினிர் முக்தா கர்ப்பிணிஸ்யா நீந ஸம்ஸய : |
அனேன கவசேனேஹ க்ரந்திதம் ரக்த தோரகம் ||

19. கடிதேஸே தாரயந்தி ஸுபுத்ர ஸுக பாகினீ |
அஸுத புத்ர மிந்த்ராணீ ஜயந்தம் யத்ப்ரபாவதி ||

(சூரிய அஸ்தமன வேளையில் இந்த ஸ்தோத்திரத்தைச் சொல்லி உறுப்புகளை தடவிக்கொண்ட கர்ப்பிணிப் பெண் ஸ்திரமான கர்ப்பத்தை அடைகிருள். உத்தமனுன பிள்ளை வேண்டுபவர்கள் சிவப்புக் கயிற்றில் முடி போட்டு இடுப்பில் கட்டிக்கொண்டு ஜபிக்க வேண்டும். இந்த ஸ்லோகத்தைச் சொல்லித்தான் இந்திராணி ஜயந்தனைப் பெற்ருள்.)

20. குருபதிஷ்டம் வம்ஸாக்யம் கவசம் ததிதம்ஸகே |
குஹ்யாத் குஹ்ய தரம் சேதம் நப்ரகாஸ்யம் ஹி ஸர்வத :
தாரணுத் படனுதஸ்ய வம்சச் சேதோ ந ஜாயதே ||

(ப்ரகஸ்பதியால் உபதேசிக்கப்பட்ட இந்த வம்ச கவசம் ரகசியமானது. துஷ்பிரயோகம் செய்யக் கூடாது. அவமதிக்கக் கூடாது. நம்பிக்கையற்றவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கக் கூடாது. எந்த இல்லத்தில் நியாயம் நசுக்கப் படுகிறதோ அந்த வம்சத்தில் சிசு நசுக்கப்படுகிறது. நல்ல

ஆண் குழந்தைகள் பிறப்பதில்லே. மலடிகள் இருக்கிருர்கள். தர்மம் செழித்த இடத்தில் குழந்தைகள் இறந்து பிறப்பதில்லே.)

21. பாலாவினஸ் யந்தி பதந்தி கர்ப்பாஸ்தத்ரா பலா:
கஷ்ட யுதாஸ்ச வந்த்யா: |
பாலக்ரஹைர் பூத கணேஸ்சரோகைர்
ந யத்ர தர்மாசரணம் க்ருஹே-ஸ்யாத் ||

(அதனுல் கர்ப்பிணிகள் உள்ள இடத்தில் நல்ல காரியங்களே நடக்கவேண்டும். பூத, ரோகங்கள் அணுகாது. அலிக்குழந்தைகள், ஊனமுற்ற சிசுக்கள் பிறக்காமலிருக்க. தர்மம் செழிக்க வேண்டும்.)

வம்ச விருத்தியைத் தரும்
வம்ச கவசம் முற்றியது

ஃ ஃ ஃ

உடல் உறுப்புகளேத் திடமாக்கும் ''லலிதாம்பிகை ஸ்தோத்ரம்''

(இந்த ஸ்தோத்திரத்தின் பலனேக் கூற அம்பிகைக்கே தகுதி என்று இதை இயற்றிய துர்வாஸரே கூறுகிருர் என்ருல் நம்மால் என்ன சொல்ல இயலும்? இந்திரியக் கேடுற்றவர்களுக்கு பலம் கூடும். பேச்சில் திக்கலிருந்தால் விலகும். ஊமையும் பேசுவான். எப்பேறப்பட்ட சாபங்களும் நீங்கி விடும். நீசக்கிரகங்கள் ஒதுங்கி விடும்.)

1. வந்தே கஜேந்திர வதனம்
வாமாங்காரூட வல்லபாஸ்லிஷ்டம் |
குங்கும பராக ஸோணம்
குவலயனீ ஜார கோரகாபீடம் ||

(இடது துடையில் அமர்ந்திருக்கும் வல்லபையால் அணைக்கப்படும் வல்லப கணபதி! குங்குமம் போன்ற சிவந்த நிறத்தவரே! யானை முகத்தானே! செங்கழுநீர்ப் பூவை புஷ்பிக்கச் செய்யும் சந்திரனைச் சிரசில் தரித்தவரே! முதற் கண் உம்மை வணங்குகின்றேன்.)

2. லலிதா பாது ஸிரோ மே
லலாட மம்பா-ச மதுமதி ரூபா |
ப்ருயுக்மம் ச பவானி புஷ்பஸரா
பாது லோசனத்வந்த்வம் ||

(எனது தலையை லலிதாதேவியும், நெற்றியை மதுமதியும், பவானி எனது இரண்டு புருவங்களையும், புஷ்ப பாணங்களைக் கொண்ட அம்பிகை என் இருவிழிகளையும் ரட்சிக்க வேண்டும்.)

3. பாயாந் நாஸாம் பாலா ஸுபகா
தந்தாம்ஸ்ச ஸுந்தரி ஜிஹ்வாம் |
அதரோஷ்ட மாதிஸக்திஸ் சக்கேஸீ
பாது மே சிரம் சிபுகம் ||

(நாசியை பாலாம்பிகையும், பற்களை சௌந்தர்யாவும், நாக்கை நாராயணியும், உதடுகளை ஆதிசக்தியும், மோவாயை சக்ரேசியும் என் உயிர் பிரியும் வரை பத்திரமாய் காக்க வேண்டும்.)

4. காமேஸ்வரீ ச கர்ணௌ காமாக்ஷீ பாது
கண்ட யோர் யுகளம் |
ஸ்ருங்கார நாயிகா வ்யாத் வதனம்
ஸிம்ஹாசனேஸ்வரீ சகளம் ||

(காமேஸ்வரி என் செவிகளையும், கன்னங்களை காந்திமதியும், முகத்தை சிருங்கார நாயகியும், ஸிம்மாசனேஸ்வரி கழுத்தையும் காக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

5. ஸ்கந்த ப்ரஸூஸ்ச பாது ஸ்கந்தௌ
பாஹூ ச பாடலாங்கீ மே |
பாணீ ச பத்மநிலயா பாயா தனிசம்
நகாவலீர் விஜயா ||

(ஸ்ரீ ஸ்கந்தனுடைய தாய் எனது தோள்களையும், கைகளைப் பாடலாங்கியும், விரல்களை பத்ம நிலையையும், நகங்களை விஜயையும் எப்போதும் காக்க வேண்டும்.)

6. கோதண்டினீ சவக்ஷ: குக்ஷிம்
சாவ்யாத் குலாசல தனூஜா |
கல்யாணீ ச வலக்னம் கடிம் ச
பாயாத்கலாதரஸிகண்டா ||

(கோதண்டினி என் மார்பையும், பர்வத ராஜகுமாரி என் வயிற்றையும், கல்யாணி மத்ய பாகத்தையும், இடுப்பை ஈஸ்வரியும் காப்பாற்ற வேண்டும்.)

7. ஊருத்வயம் ச பாயாது மா
ம்ருடானீ ச ஜானுனீ ரக்ஷேத் |
ஜங்கேச ஷோடஸீ மே பாயாத்
பாதௌ ச பாஸஸ்ருணிஹஸ்தா ||

(துடைகளை உமாதேவியும், முழங்கால்களை ம்ருடானியும், ஷோடசி ஜங்கமப் பிரதேசத்தையும், பாசம், ஸ்ருணி இவைகளோடு விளங்கும் ராஜேஸ்வரி கால்களையும் ரட்சிக்க வேண்டும்.)

8. ப்ராத: பாது பராமாம் மத்யான் ஹே
பாது மணி க்ருஹா தீஸா |
ஸர்வாண்யவது ச ஸாயம்
பாயாத் ராத்ரௌ ச பைரவீ ஸாக்ஷாத் ||

(காலையில் பாரபட்டாரிகையும் உச்சி வேளையில் கோமதியும், சாயங்காலத்தில் சர்வாணியும், இரவில் பைரவியும் என்னைப் பாதுகாக்க வேண்டும்.)

9. பார்யாம் ரக்ஷது கௌரி பாயாத்
புத்ராம்ஸ்ச பிந்து க்ருஹ பீடா |
ஸ்ரீ வித்யா சயஸோ மேஸீலம்
சாவ்யாச் சிரம் மஹாராக்ஞி ||

(என் துணையை கௌரியும், என் குழந்தைகளை பிந்து வாஸினியும், என் புகழை ஸ்ரீவித்யாவும் எனது ஒழுக்கத்தை மஹாராக்ஞியும் காக்க வேண்டுமாய் வேண்டிக் கொள்கிறேன்.)

10. பவனமயி பாவகமயி க்ஷோணிமயி |
ககனமயி க்ரு பீடமயி |
ரவிமயி ஸஸிமயி திங்மயி
ஸமயமயி ப்ராணமயி ஸிவே பாஹி ||

(காற்று, அக்கினி, பூமி, ஆகாயம், தண்ணீர், சூரியன், சந்திரன், திசைகள், யமன், உயிர் இப்படி எல்லா வடிவிலும் உள்ள மங்களாம்பிகே நான் உன் அடைக்கலம்.)

11. காளி கபாலினி ஸூலினி பைரவி
மாதங்கி பஞ்சமி த்ரிபுரே |
வாக்தேவி விந்த்ய வாஸினிபாலே
புவனேஸி பாலய சிரம்மாம் ||

(காளி, கபாலினி, சூலினி, பைரவி, மாதங்கி, பஞ்சமி, திரிபுரசுந்தரி, சரஸ்வதி, உமை, பாலா, புவனேஸ்வரி என்பது போன்ற எண்ணற்ற வடிவங்கள் கொண்டவளே என்றும் எனக்குத் துணை இருப்பாயாக!)

12. அபிநவ ஸிந்தூரா பாமம்பத்வாம்
சிந்த யந்தியே ஹ்ருதயே |
உபரி நிபதந்தி தேஷா முத்பல
நயனுகடாக்ஷ கல்லோலா

(எவர்கள் தங்களது இதயத்தில் எப்போதும் உன்னை தியானம் செய்கின்றார்களோ அவர்களின்மேல் மஹாலட்சுமியின் கடைக்கண் பார்வை பதிந்திருக்கிறது.)

13. வர்காஷ்டகமிலிதா பிர்வஸினிமுக்யா
ப்ராவ்ருதாம் பவதீம் |
சிந்தயதாம் ஸிதவர்ணும் வாசோ
நிர்யாந்த்யயத் நதோ வதனுத் ||

அ. க, ச, ட, ப, ய, ச என்ற அட்சரங்களோடு கூடிய வசினி முதலியவர்களால் சூழப்பட்ட மகாதேவி! உன்னைத் தியானம் செய்பவர்கள் நாவைவிட்டு வாணி நீங்குவதில்லை.)

14. கனக ஸலாகா கௌரீம் கர்ண
வ்யாலோலகுண்டலத் விதயாம்!
ப்ரஹஸிதமுகீம் ச பவதீம்
த்யாயந்தோ யே த ஏவ பூதனதா: |

(தங்கம் போன்ற நிறத்தவளே! செவிகளில் அழகிய குண்டலங்களை உடையவளே! சிரித்த முகத்தை உடைய தங்களைத் தியானம் செய்கின்றவர்கள் குபேரனைப் பழிக்கும் செல்வந்தர்களாகின்றனர்.)

15. ஸீர்ஷாம் போருஹ மத்யே ஸீதளபீயுஷ
வர்ஷிணீம் பவதீம் |
அனுதின மனுசிந்தயதாமாயுஷ்யம்
பவதி புஷ்கலமவன்யாம் ||

(வகிட்டின் நடுவில் குளிர்ச்சியான அமிர்தம் பொங்கிக் கொண்டிருக்கும் அமிர்த வதனீ! தினமும் உன்னைப் பிரார்த்திப்பவர்களுக்கு தீர்க்காயுள் உண்டாகிறது.)

16. மதுரஸ்மிதாம் மதாருணநயனும்
மாதங்ககும்பவக்ஷோஜாம்
சந்திராவதம்ஸினீம் த்வாம் ஸவிதே
பஸ்யந்தி ஸுக்ருதின; கேசித் ||

(மதுரமான சிரிப்பை உடையவளே— கோபத்தில் சிவக்கும் விழிகளை உடையவளே | கடினமான ஸ்தன பாரங்களை சுமந்து கொண்டிருப்பவளே | சந்திரக்கலையை உடையவளே | மனதை ஒருமைப்படுத்திய புண்ய சாலிகள் உன்னைப் பார்க்கும் பாக்கியத்தைப் பெறுகிறார்கள்.)

17. லலிதாயா; ஸ்தவரத்னம் லலித பதாபி:
 ப்ரணீதமார்யாபி: |
 ப்ரதிதினமவனௌ படதாம் பலானி
 வக்தும் ப்ரகல்பதே சைவ ||

(லலிதமான சொற்களை உடைய லலிதா ஸ்தவரத்னமான இதைத் தினமும் படிப்பவர்களுக்கு என்ன பிரயோசனம் என்பதைச் சொல்ல அந்த லலிதாம்பிகைக்கே தகுதி உண்டு.)

லலிதா ஸ்தவ ரத்னம் முற்றியது.



